திராவிடநாடு


விலை 2 அணா

REGD M 4642

# கட்டுக்கதை

"நிலச்சுவான்தார்களும், முதலாளிகளும் தன்னலங்கருதாமல் பிறர் நன்மைக்காகப் பொருள்களை அபிவிருத்தி செய்ய வேண்டுமென அவர்களுக்குப் போதித்தால், அவர்கள் அதற்கு இணங்குவதோடல்லாமல் மக்களின் சகல நன்மைக்கும் தாங்களே பொறுப்பாளிகளென உணர்ந்து கொள்ளுவார்கள் என்று நினைப்பது ஒரு கட்டுக்கதையேயன்றி நடக்கக்கூடிய காரியமல்ல."

பாலன்பிரசாத்வர்மா,



மலர் 6 ] 1—6—47 [இதழ் 1

16-ம் பக்கத் தொடர்ச்சி

டும். அந்தத் தெளிவை அவர்கள் பெற்றுவிட்டால், பெரிய புராணம் கம்ப ராமாயணம் போன்ற நூல்கள் கவிநயத்துக்காகப் பாடப்பட்டனவா? அன்றித் தங்கள் தங்கள் மதங்களுக்கு ஆள் சேர்ப்பதற்காகப் பாடப்பட்டனவா? என்ற உண்மை புலப்பட்டுவிடும்.

இனி, ஒரு புலவன் உண்மையாகவே கவிநயம் ஒன்றையே தன்னுடைய குறிக்கோளாகக் கொண்டு, மக்கள் அனைவரும் கவிநயத்தை நுகர்ந்து இன்புற வேண்டுமென்ற விருப்பத்தோடு கவி பாடுபவனாய் இருந்தால், அவன் அதற்காக ஒரு போதும் தன்மொழியல்லாத பிறமொழி நூல்களையும், தன்னவரல்லாத பிறருடைய வரலாறுகளையும், தன் நாடல்லாத பிறநாட்டு வளப்பங்களையும் இரவல்வாங்கி கவிபுனையவே மாட்டான். கம்பர், வடமொழி இராமாயணத்தையும், சேக்கிழார் வடமொழி நூல்களான உபமன்யு பக்த விலாசம், பக்த விஜயம் போன்ற நூல்களையுமன்றோ இரவல் வாங்கிக் கவிபுனைந்துள்ளனர், மொழி நமக்குப்புறம்பானது; அந்த மொழியில் பேசப்படும் வரலாறு நமக்குப் புறம்பானது; அந்த வரலாற்றில் பேசப்படும் நாடும் இனமும் நமக்குப் புறம்பானவை. இந்த நிலையில் அந்தக் கவிகளில் உள்ள நயத்தை நாம் நுகர்ந்து அடையக்கூடிய இன்பம் யாதோ நாமறியோம்.

இனிச் சிலர், இராமாயணம் நமக்குப் புறம்பானதென்பது உண்மை யென்ற போதிலும், பெரிய புராணத்தை நமக்குப் புறம்பான நூல் என்று எப்படிச் சொல்லலாம்? அதில் பேசப்படுவன எல்லாம் நம் நாட்டைப் பற்றியும் நம் நாட்டவரைப் பற்றியும் உள்ள வரலாறுதானே, அதை இரவல் நூலென்று எப்படிச் சொல்லலாம் என்று கேட்பர். அங்ஙனம்கேட்பவர்கள், முதலில் வடமொழியிலுள்ள பக்தவிஜயத்தையும், உபமன்யு பக்த விலாசத்தையும் ஒருமுறை படித்துப் பார்ப்பார்களானால், அதுசர்க்கரை பூசப்பட்ட நஞ்சென்பதை உணர்வர். அதாவது, பெரிய புராணத்தில் பேசப்படும் வரலாறுகள் இரவல் என்பதையும் அவ்வரலாறுகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பெயர்கள் மட்டுமே நம்மதென்பதையும் எளிதில் உணர்வர். பெரிய புராணம், பக்த விஜயம், உபமன்யு பக்தவிலாசம் ஆகியமூன்று நூல்களையும் ஒப்புநோக்கிப் பார்ப்பவர்க்கு, அவற்றில் பேசப்படும வரலாறுகள் ஒவ்வொன்றும் ஒன்றையொன்று பார்த்துப்படி (நகல்) எடுத்தது போலவே தோன்றும்.

இனி, இம்மூன்று நூல்களில் எது முந்தியது, எது பிந்தியது? எதைப் பார்த்து எது எழுதப்பட்டது என்ற ஆராய்ச்சி நமக்கு வேண்டுவதில்லை கவிநயத்துக் காகவும் கலைஇன்பத்திற்காகவுமே புராணம் பாடிய சேக்கிழார்—கவிபுனைவதில்ஆற்றல் பெற்றிருந்தசேக்கிழார் ஆண்பனைகள் ஆண்டவனருளால் பெண்பனைகளாயின என்ற அறிவுக்கும் இயற்கைக்கும் பொருந்தாத நிகழ்ச்சியைத் தாம்பாடிய 'கவிநய' த்தில் ஏன் புகுத்தினார்என்பதையாவது எண்ணிப்பார்க்க வேண்டாமா? ஆண்பனை பெண்பனையாயிற்று என்று பாடினால் தான் கவிநயம் சிறப்புற்று இனிக்குமா? இல்லையேல் கசக்குமா? ஆண்பனையின் அமைப்பையும் பெண்பனையின் இயல்பையும் கவியில் அமைத்துப் பாடினால் அங்கு கவிநயம் சொட்டாதா? ஆண்பனை பெண்பனை ஆகிய இரண்டினாலும் மக்கள் அடையும் பயனைப் பாடலின் வாயிலாக விளக்கினால், பாடலிலுள்ள நயத்தையும் பனைமரத்தால் ஏற்படும் பயனையும் மக்கள் ஒருங்கே நுகர்ந்து இன்புறுவரன்றோ! ஆண்பனை ஆண்டவனருளால் பெண்பனையாக மாறிற்றென்று பாடப்பட்ட கவியைப் பார்க்கிலும் பனைமரம் இன்னின்ன வகையில் மக்களுக்குப் பயன்படும் என்று பாடியிருந்தால், அத்தகைய பாடல்களில் கவிநயமோ கலை இன்பமோ இல்லையென்று மக்கள் அக்கவிகளை வெறுத்தொதுக்கி விடுவரா?

இனி, ஆண்பனை ஆண்டவனருளால் பெண்பனையாக மாறிற்றென்ற நிகழ்ச்சி, மக்களுககுக் கவிநயத்தை ஊட்டுமா? அல்லது மதப்பற்றை உண்டாக்குமா? என்பதை யாவது எண்ணிப் பார்க்க வேண்டாமா? ஆண்பனை பெண் பனையாக மாறிற்றென்பதோடு மட்டும் சேக்கிழார் நிற்கவில்லையே! "சம்பந்தரின் அருள் பெற்ற காரணத்தால் அப்பனைகள் தங்கள் காலம் கழித்து முடிவில்சிவமாயின" என்று மன்றோ பாடியுள்ளார். இந்நிகழ்ச்சி, கலையுணர்விற்கும் கவிநயத்துக்கும் ஒரு எடுத்துக்காட்டென்று எவராவது கூறமுடியுமா? சைவசமயத்துக்கு ஆள்சேர்ப்பதை விட, இந்நிகழ்ச்சி கற்பிக்கும் பாடம் என்ன? சைவ சமயத்தைப் பின்பற்றும் பனைக்கும் சிவப்பேறு கிடைக்குமென்றால், மக்களுக்குஅப்பேறு கிடைப்பது அரிதாமோஎன்று கூறுவதன் வாயிலாகச் சைவசமய வளர்ச்சிக்குச் சேக்கிழார் எத்துணை அரும்பாடு பட்டுள்ளார் என்பதையன்றோ இந்நிகழ்ச்சி கண்ணாடி போல் களங்கமற எடுத்துக்காட்டுகின்றது! இல்லையேல், சைவசமயக் கோட்பாட்டுக்கே முரண்பாடான ஒரு கொள்கையைச் சைவத்தை வளர்க்கும் ஆர்வத்தில்சேக்கிழார் தம்மை மறந்து கூறியிருக்க முடியுமா?

மக்களாய்ப் பிறந்தாலன்றிச் சிவனுடைய திருவடி நீழலை அடைய முடியாதென்பது சைவசமயக் கோட்பாட்டின் முடிந்த முடிபாய் இருக்கவும், இங்கு "பனைகளும் சிவமாயின" என்றுசேக்கிழார்கூறியிருப்பது, அவருக்கு, எப்படியாவது சைவத்தின்பால் மக்களுக்குப்பற்றை உண்டாக்கித் தீரவேண்டுமென்றிருந்த அவசரத்தோடு கூடிய ஆர்வத்தைக் காட்டுகின்றதே தவிரத், தாம் கூறுவது முன்னுக்குப் பின் முரண் என்பதையும், சைவ சமயத் துணிபுக்கே மாறுபட்டதொன்றென்பதையும்அவரால் உணர்ந்துகொள்ள முடியவில்லை. இனி, அக்காலச் சமணர்கள், அன்பும் அறிவுமே மக்களின் நல்வாழ்க்கைக்குத் துணை செய்வன என்ற தங்கள் மதக்கோட்பாட்டின்படி, தன்னலங் கருதாது மக்களை நன்னெறியில் நின்றுஒழுகச் செய்தது, தந்திரமான தங்கள் சுயநலப் பிழைப்புக்கு வழி கோலுவதற்காகவே உண்டாக்கப்பட்ட சைவ சமயத்தின் துணைகொண்டு, அதனிடத்து அளவிடற்கரிய அற்புதங்கள் இருப்பதாகவும், அவ்வற்புதங்களை வேறெந்தச் சமயங்களிலும் சமயக் கடவுளரிடத்தும் காண்டல் அரிதென்றும் கூறி மக்களை எப்படியாவது தம்வயப்படுத்தும்படியான நிலைமையை உண்டாக்கி விட்டது. இல்லையேல், "யாதொருதெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகிஆங்கேமாதொருபாகனார் தாம் வருவார்" என்று கூறியவர்களே, சமண சமயத்தை ஒழித்துக்கட்ட முன் வந்திருப்பார்களா? சமண சமயமும் அதன் கடவுளும் "யாதொரு தெய்வம்" என்பதில்அடங்கவில்லையா? அடங்கவில்லை

(7-ம் பக்கம் பார்க்க)

இலங்கை 15 சதம் மலாய் நாடு 12 காசு

விலை 2 அணா **திராவிடநாடு** ஆண்டுசந்தா ரூ7.

# ★ அபாய அறிகுறி ★

வெள்ளையர் வெளியேறும் நாள் விரைந்து வந்துகொண்டிருக்கிறது. உண்மையான ஆளும்உரிமை 'இந்தியர்'கைக்குக் கிடைத்துப் பலகாலம் ஆகிறது. ஊர்அறிய உரைக்காதது தான், மன்னர் பிரான் சர்க்காரின் குறை. கூறுவதில் வெட்கமுமில்லை, வெறுப்புமில்லை. இங்குள்ள குளறுபடைதான் அதற்கும் காரணம்.

நடனசாலை — நாரிமணிகளின் சாகசம்—மதுமாளிகைமுதலிய கலைபலபயின்ற வெல்லிங்டன் போன்றோரும் வைசிராயாக வந்த பொழுது, பரணி பாடினதை நாம் பார்த்திருக்கிறோம். போர்பலகண்டு விருதுபல பெற்ற வேவல்துரை, முகாரி தவிர வேறெதுவும் அறியார் தம் ஆட்சிக் காலத்தில். மவுண்ட்பேட்டன் போக்கும் அதுவேதான். ஏகாதிபத்தியம் செப்பனிடமுடியாத தன்மையைப் பெற்று விட்டதன் விளைவு இது.

'இந்தியாவில் இரண்டு கட்சிகள் தான் உண்டு. ஒன்று ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் காங்கிரஸ்; மற்றொன்று ஆளும் ஏகாதிபத்யம்; மற்ற கட்சிகள் அனைத்தும் ஏகாதிபத்திய எடுபிடி எனவும், சுதந்திரம் கிடைக்கும் வரையில் வேறுகட்சிகள் இருத்தல் ஆகாது என்றும் காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் ஒரே மூச்சாகக் கூறிவந்தார்கள். இந்தப் பேச்சைக் கேட்டுக் கேட்டுக் காது செவிடாகப் போய்விட்டது. ஆனால் இன்று நாம் காண்பதென்ன? வெளியேற நாள் குறித்தபின்பும், காங்கிரஸ் தவிர வேறுகட்சிகள் இருக்கக்கூடாது எனும் தன்மையில் தான் காங்கிரஸ் தலைவர்கள் செயலாற்றுகிறார்கள். ஏன் இந்தப்போக்கு-முரண்பாடு.

மே 3, 4-தேதிகளில் புதுடில்லியில் பட்டேல் தலைமையில் இந்திய தேசிய தொழில் சங்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்குச் சில மாகாணத்தின் பிரதமர்களும், தொழில் மந்திரிகளும் வந்திருந்தனர். இடைக்கால இந்திய சர்க்காரின் தொழில் மந்திரி ஜகஜீவன் ராமும் அதில் கலந்து கொண்டார். விளம்பர சமதர்மிகளான கமலாதேவி, அருணா அம்மையார், அசோக் மேத்தா முதலியவர்களும் பங்கெடுத்துக் கொண்டனர். காங்கிரஸ் தலைவர் கிருபளானியும், செயலாளர் சங்கரராவ்தேவும் உடனிருந்தார்கள், பம்பாயின் தொழில் மந்திரியானகுல்சரிலால் நந்தா குறிப்பிடத்தகுந்தவராவார். இவ்வளவு பெயர்களுமாகச் சேர்ந்து எந்த அரசியல் கட்சியின் தொடர்புமற்ற ஒரு தேசியதொழிற் சங்கம் ஆரம்பித்திருக்கிறார்கள்!

ஏற்கனவே, இந்தியாவில் இரு தொழில் சங்கங்கள் இருக்கின்றன. ஒன்று அகில இந்திய தொழில்சங்கக் காங்கிரஸ்; இந்தியத் தொழிலாளர் பெடரேஷன் மற்றொன்று. மூன்றாவதாக அகமதாபாத்தில் ஒரு குட்டிச் சங்கமும் இருக்கிறது, அதுகாந்தியாரால் ஆரம்பிக்கப்பட்டது, குல்சாரிலால் நந்தாவின் ஆதிக்கத்தில் உள்ளது. இவ்வளவும் இருக்கப் புதியசங்கம் ஏன்?

தொழிற்சங்கக் காங்கிரஸ் கம்யூனிஸ்ட் ஆதிக்கத்தில் சிக்கிவிட்டதாம். அதன் போக்குக் காங்கிரஸ் கொள்கையை விரோதிப்பதாகஇருக்கிறதாம். அதற்காகத் தானும் புதிய சங்கம், புதியசங்கத்தை ஆரம்பித்து வைத்த குல்சாரிலால் நந்தா புதிய சங்கம் தோற்றுவிப்பதற்கான அவசியத்தைக் குறிப்பிடும்பொழுது, காந்திய வாழ்க்கைத் தத்துவத்தைக் கடைப்பிடிப்பதே தொழிலாளர் கடமையாக இருக்கவேண்டுமெனக்கூறியுள்ளார். காந்திய வாழ்க்கைத்தத்துவத்தை நாம் அறிந்து கொள்வதற்கு முன்னால், இந்தக்குல்சாரிலால் நந்தா யார் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். சென்ற ஆண்டில் இதே கனவானால் மஸ்தூர் சேவா சங்கமென ஒரு தொழிற் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. பிர்லா மாளிகையிலே ஆரம்பமாயிற்றுஅது. அதற்கு ஆரம்பநிதியாக பிர்லா பெருந்தொகையும் கொடுத்தார். இன்று இவர் பம்பாய் சர்க்காரில் தொழிலாளர் மந்திரி; தொழிலாளர்வேலைநிறுத்தத்தைச் சட்ட விரோதமாக்கிவிட்ட மசோதாவைப்பம்பாய்மாகாணத்தில் சட்டமாக்கி வைத்த மகானுபாவர் இவர்தான். இவர் முதலாளிகளின் முன்னோடும் பிள்ளை அல்லஎனநாம் சொன்னாலும், நம்புவதற்கு எவரும் இருக்கமுடியாது.

எளிய வாழ்க்கை, உயர்ந்தசிந்தனை என்பது தான் காந்தியாரின் வாழ்க்கைத்தத்துவம். மக்களின் மந்தமதி, பழைமை மோகம் ஆகியவற்றால்உண்டாகும் பெரும் புகழ், பிர்லாவின் பாசமும் நேசமும் பணபலமும்தரும் செல்வாக்கு முதலியவைகள் காந்தியார் போன்றவர்களுக்கே கிடைக்கக் கூடும். சாதாரண தொழிலாளிக்குக் கிடைக்கக்கூடியதல்ல. அவர்கூறலாம் எளிய வாழ்வின் சிறப்பையும், சீரிய சிந்தனையின் பெருமையையும். சாதாரண தொழிலாளியால் அது நடக்குமா? கஞ்சிக்கலயத்தைப் பார்த்துப்பார்த்துப் பசியாற வேண்டிய பாட்டாளியிடம் பெரிய எண்ணங்கள் எப்படிக் குடியேறமுடியும்? குழந்தை குட்டிகளைக் காப்பாற்ற வேண்டிய கவலையிலே மூழ்கிப்போய் இருக்கிற ஏழையிடம், ஏற்றமான எண்ணங்கள் இடம் பெறுமா? உழைத்து உழைத்து உடம்பிளைத்தும் வயிறார உண்பதற்கு மார்க்கம் தெரியாத பஞ்சையிடம் பரந்த சிந்தனை முளைப்பதெங்கே? வெறும்பகற் கனவு! பாட்டாளியிடம் பரம்பரை ஏமாளித்தனத்தை, அடிமைவாழ்வை

நிரந்தரமாக்குவதே இந்தப்போதனை!

'எளிய வாழ்விற்கு' அவசியம்தான் என்ன? இயற்கைச் செல்வம் ஏராளமாக இருக்கிறது நாட்டிலே. அனைவருக்கும் பயன்படும்முறையில அந்தச் செல்வத்தைஆக்கித்தருகிறான் தனது உடல் உழைப்பால் பாட்டாளி. ஆனால் அவனுக்குக் கிடைப்பதோ வறுமை. ஏமாந்த காலத்தில் ஏற்றங்கொண்ட எத்தர்கள், அவன் உழைப்பை அபகரித்துக்கொண்டு வளத்தோடு வாழ்கிறார்கள். அத்தகைய வாழ்வால் வளமடைந்தவர்கள் தாமாக அதனை இழக்க முன்வர மாட்டார்கள். அன்னாருக்குத்தான் வேண்டும் காந்தியாரின் 'எளிய வாழ்வுப்' பாடம். வெளியேற வழி தெரியாது இல்லாமை இருட்டிலே தடவிக்கொண்டிருக்கும் ஏமாளிகளுக்குஏன்'எளியவாழ்வுப்'போதனை? எளிய வாழ்விலேயே புழுப்போல் நெளிந்துகொண்டிருக்கும் பாட்டாளிகளுக்கு, எளிய வாழ்வின் உயர்ந்த பண்பை உபதேசிக்கும் மகாத்மா, அவர்கள் உழைப்பைப் பணமாக்கும் பரோபகாரிகளுக்குக் கருணை வள்ளல்களுக்குச் சூட்டுகிறார் தர்ம கர்த்தாப் பட்டம். ஏற்குமா இது? இதுதான் நீதியா?

எளிய வாழ்க்கை ஏற்றமானது என்கிற அடிப்படையில் நமது முன்னோர்கள் உயிர் வாழ்ந்திருப்பார்களானல், மனிதவரலாறே மரத்துக்கு மரம் தாவும் தன்மையுடையது என்கிற முடிந்தநிலையிலேயல்லவா நின்றுவிட்டிருக்கும்? காங்கிரஸ் தலைவர்கள் ஆகாயத்தில் பறப்பதும், புகை வண்டியில் போவதும், ஒலி பெருக்கியில் பேசுவதும், மின்சாரத்தால் சுகம் பெறுவதும் இருந்திருக்கவே முடியாதே! எளிய வாழ்விலே நம்பிக்கையுடைய மகாத்மாவும், அவரது சீட கோடிகளும் செய்திருக்க வேண்டியதென்ன? எல்லாவித இயந்திர சாதனங்களையும் ஒழித்திருக்கவேண்டும். அதிகாரம் இல்லாத காலை செய்யவில்லையானலும், அதிகாரத்தில் அமர்ந்துள்ள காலத்திலாவது செய்திருக்க வேண்டும், செய்யக் காணோமே. நேர்மாற்றமாக அல்லவா நடக்கிறார்கள்? எளியவாழ்க்கை என அவர்கள் செய்யும் உபதேசம், உழைப்பாளிகள் தமது உழைப்பின் முழுப்பலனையும்பெறுமல் தடைசெய்வதற்கேயாகும். முதலாளிகள்மேலும் சுரண்டிவாழவே காங்கிரஸ்போக்குப் பயன்படுகிறது. தொழிலாளர்கள்தங்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக்கொள்ளக், கூட்டாக இருந்துமுயலுகிறார்கள். முதலாளிகளின் முறுக்கும், அதிகாரத்தின் அச்சுறுத்தலும் தொழிலாளர்களின் மன உறுதியையும், ஒற்றுமையையும் சீர்குலைக்க முடிவதில்லை. முடிவில் தொழிலாளர்களே வெற்றி பெறுகிறார்கள். ஒரு சிலரின் போக போக்கிய வாழ்வைக் காட்டிலும், பல்லாயிரக் கணக்கான பாட்டாளி மக்களின் வாழ்வுமுக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதாகும். இதனைக் காங்கிரஸ் செய்யாது. காங்கிரஸ் பாட்டாளிகளின் ஸ்தாபனமல்ல. ஒரு தேசிய ஸ்தாபனம். ஒருதேசியஸ்தாபனத்தில் ஏழைகள் நிறைந்திருந்தாலும், தொழிலாளர்கள் நிறைந்திருந்தாலும், விரல் விட்டு எண்ணக்கூடிய முதலாளிகளின் ஆதிக்கந்தான் அதில் இருக்க முடியும். இது அரசியல் அரிச்சுவடி.

இன்று கிடைத்திருப்பது தேசிய விடுதலை. இந்த விடுதலை பிர்லா, டால்மியா, டாடா போன்ற முதலாளிகளுக்கேகிடைத்துள்ளவிடுதலையாகும். இவ்விடுதலையால் பஞ்சம் தீர்ந்துவிடாது. பாட்டாளியின் வாழ்வு உயர்ந்துவிடாது. உற்பத்தி பெருகாது. உற்பத்தியைப் பெருக்குவது என்பதெல்லாம் முதலாளிகளுக்குக் கிடைக்கும் அதிகப்படியான லாபத்தைப் பொறுத்திருக்கிறது. லாபம் அதிகமாகக் கிடைக்க வேண்டுமானல் உற்பத்திக்கான செலவையும், மூலப் பொருளுக்குக் கொடுக்கும் விலையையும் குறைப்பதால்தான் அதிக லாபம் பெறமுடியும். இதன் விளைவாக ஏழை உழவர்களின் உழைப்புக்கும் நல்லஊதியம் கிடைக்காமல் போகும். இந்த நாட்டிலோ இன்னும் ஜமீந்தாரி முறை சிரஞ்சீவியாக இருக்கிறது. உழவர்களின் உழைப்பைஉறிஞ்சிக்கொழுப்பவர்கள் ஜமீந்தாரர்களாவர். உழைக்கும்உழவனுக்குக் கால் வயிற்றுக் கஞ்சிக்கும் கொடுப்பதில்லை. உழவனின் கடன் சுமையோ கோடிக்கணக்கில். அதற்காக அவன் கொடுக்கும் வட்டிப் பணமோ பட்ட கடனிலும் அதிகம். நமது நாட்டிலோ நூற்றுக்கு எழுபது பேர் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். நாட்டில முக்கியதொழில் விவசாயந்தான். விவசாய முறையும் காட்டுமிராண்டிக் காலத்தது. இதன் பலனாக உழவனின் உழைப்பு முழுதும் நிலத்திலேயே வீணாக்கப்படுகிறது. உழைப்புக்கேற்ற அளவிற்கு உற்பத்தியும் பெருக வழி இல்லாமல் போகிறது. ஏழை உழவனின்உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்காத காரணத்தால், தொழிற்சாலைகளில் செய்யப்படும் பொருட்களை வாங்க அவனிடம் பணம் இருப்பதில்லை. ஏராளமான தேவை இருந்தும்கூட, அவனுக்குப் பொருட்களை வாங்கும்சக்தி இல்லாத காரணத்தால், தொழிற்சாலைகளில் உற்பத்தியான பொருட்கள் விற்பனையாகாமல் தங்கிவிடும். இதனால் மேலும் உற்பத்தி செய்ய எவரும்முனையமாட்டார்கள். எனவே தொழிற்சாலைகளை மூடவேண்டியதுதான். தொழிற்சாலைகளின் கதவு அடைக்கப்பட்டால், தொழிலாளர்கள்வேலையின்றித்திண்டாட வேண்டியதுதான்.

லாபத்தையே குறியாகக்கொண்ட பொருள் உற்பத்தி முறையை மக்களின் தேவையைப் பூர்த்திசெய்வதற்கான உற்பத்தி முறையாக மாற்றியமைக்க வேண்டும். இந்த முறையை எந்த முதலாளியும் ஒத்துக்கொள்ள மாட்டான். முதலாளிகளை முதுகெலும்பாகக் கொண்ட காங்கிரஸ் ஸ்தாபனம் இதனை மேற்கொள்ளாது. காங்கிரசிலுள்ள தலைவர்களில் பலர் சமதர்மம் பேசுபவர்களாக இருக்கலாம். அவர்கள் திரிகரண சுத்தியாகப் பேசுவதாகக்கூட இருக்கலாம். பேச்சு மட்டும் போதாது. அவர்கள் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கையைப் பொறுத்திருக்கிறது, அவர்கள் சொல்லும் சமதர்மத்திற்குள்ள பொருள்.

பண்டித நேருவைக்காட்டிலும் சமதர்மம் பேசுகிறவர்கள் காங்கிரசில் கிடையாது. இந்திய சர்க்காரின் நிதி மந்திரியான லியாகத் அலிகான், முதலாளிகள்மீது வரி விதித்தார். கோடிக்கணக்கில் யுத்தத்தில் பணம் திரட்டினவர்கள் இந்த முதலாளிகள் தான். நாட்டில் வரி கொடுக்கும்நிலையில் வேறு எவரும் இல்லை. எனவே வரி கொடுக்கும் சக்தி இருக்கிறவர்கள்மீதுதான் வரி போடப்படவேண்டும். இது வரி விதிக்கும் முறையின் மூலம். நிதிமந்திரி இதனை மேற்கொண்டார். இப்போக்கை வர்த்தக சங்கங்கள் கண்டித்தன. வேலைநிறுத்தம் செய்தன. அவர்களால் நடத்தப்படும் பத்திரிகைகள் 'ஹிந்து முதலாளிகளுக்கு ஆபத்து' என மதத் துவேஷ விஷத்தைக் கக்கின. சமதர்ம நேரு செய்ததென்ன? வரி

(13-ம் பக்கம் பார்க்க)

# நகைச்சுவை மன்னனுக்குப் பெரும் வரவேற்பு

(பண்டித ... ர். சிரோமணி)

**கோவை 24—5—47**

கோவை எங்கும் அன்று ஒரே குதூகலம். ஸென்ட்ரல் ஸ்டூடியோவைச் சுற்றிப் பொதுமக்களின் கோலாகலப் பேச்சு. மணி 4 அடிப்பதற்குள் ஏராளமான கார்களில் பல கனவான்கள் விஜயம் செய்து ஸ்டூடியோவினுட் பகுதியில் ஆசனத்தில் அமர்ந்திருந்தனர். ஸ்டூடியோவின் வாசலில் மாலையுடன் நின்று கொண்டிருந்த ஜூபிடர் பிக்சர்சின் உரிமையாளர்களான தோழர் எம். சோமசுந்தரம், தோழர் எஸ். கே. மொஹைதீன் ஆகிய இருவரது பார்வைகளும் கைக்கடியாரத்தின் மீதும், வரும் கார்கள் மீதும் மாறி மாறி விழுந்தன. "இதோ வந்துவிட்டார்!" இது வெளியே காத்திருக்கும் மக்களின் ஆரவாரம். "அடே! ஏமாந்துட்டமே! ஷண்முகஅண்ணைச் சீல்ல!" இதுவும் ஏமாந்துபோன அவர்களது குரலே! தோழர் டி. கே. ஷண்முகம், தோழர் டி. கே. முத்துசாமி, கிருஷ்ணன் நாடக சபையின் உரிமையாளர் தோழர் கே. ஆர். ராமசாமி, ஸி.என். அண்ணாத்துரை டி. பி. பொன்னுச்சாமி பிள்ளை, பி. வி. எதிராஜ், இதுபோல் மற்றும் பல பிரமுகர்கள், 'கவியின் கனவு' ஆசிரியர் தோழர் எஸ். டி. சுந்தரம் முதலியவர்களும் ஒவ்வொருவராக வந்தனர்.

சரியாக 4-15க்குத் தோழர் என். எஸ். கே. கோலப்பபிள்ளை சகிதமாக வந்திறங்கினர்.

வாயற்படியில் காத்திருந்தஉரிமையாளர்களின் கையிலிருந்த மாலைகள் நகைச்சுவை மன்னனின் கழுத்தை அலங்கரித்தன. 'கிளிக்' என்ற சத்தத்துடன் 'காமிரா'க்கள் வரவேற்றன. 'கிருஷ்ணன் வாழ்க' என்ற கோஷம் வானளாவியது.

வழக்கமான அதே புன்னகையுடன், அதே நடையுடன், என். எஸ். கே. உள்ளே வந்து ஆசனத்தில் அமர்ந்தார். கைகூப்பியும், சிரித்தும் பேசியும் பலவிதமாகக் கனவான்கள் வரவேற்றனர். விழா ஆரம்பமாயிற்று.

திருப்பூர் நகர சபைத் தலைவர் தோழர் வி. கே. பழனிசாமி அவர்கள் வைபவத்திற்குத் தலைமை வகித்தார்.

### சினிமா உலகம் இருள் சூழ்ந்திருந்தது.

"தோழர் என். எஸ். கே. நம்மை விட்டுப் பிரிந்துசிலகாலம் சிறையிலிருந்திப்பினும், அதுபல்லாண்டுபோல் தோன்றுகிறது. சங்கீத, சினிமா, நாடக உலகத்தில் அன்னாரின் புகழ் அளவற்றது. அவர் இல்லாத காலத்தில் சினிமா உலகம் இருள் சூழ்ந்திருந்தது. மனித வாழ்வில் சுக துக்கம் இரவு பகல்போல்மாறிவருமென்பதற்குத் தோழர் என். எஸ். கேயின் வாழ்க்கையே தக்கசான்று. மனிதன் இன்பத்தை அனுபவிக்க விரும்புகின்றான். தோழர் என். எஸ். கே. ஹாஸ்யச் சுவையின் மூலம் இன்பமூட்டுகிறார். அவருக்குப் பொதுமக்கள் சார்பிலும், ஜூபிடர் பிக்சர்சாரின் சார்பிலும் என் வரவேற்பு." என்று கூறித்தலைவர் வரவேற்றார்.

### இன்பமூட்டும் உயிருள்ளபொருள்.

அடுத்தபடியாகக்கோவைத்தோழர் ஸி. ஏ. அய்யாமுத்து, வரவேற்றுப் பேசுகையில், "தோழர் கிருஷ்ணனைப் பார்க்கிற பொழுதெல்லாம் இதயத்தில் இன்பம் திகழ்கிறது. அன்னார், இன்பமூட்டும் உயிருள்ள பொருள். மனிதன் சுயநலமுடையவன். நமக்கு இன்பம்வேண்டுமென்ற சுயநலத்தால், இன்பமூட்டும் பொருளான தோழர் கிருஷ்ணனை நாம் நேசிக்கின்றோம். தன்மீதுள்ள ஆசையாலேயே பிறர்மீது ஆசை ஏற்படுகிறது. குழந்தை தனக்கு இன்பமூட்டுவதாலே... அதை அவன் விரும்புகின்றான்.

தோழர் கிருஷ்ணன் சிறை வாழ்க்கையை எப்படி ஏற்றாரோ? அங்கும் நகைச்சுவை கிளப்பினாரோ? இதை அன்னார் கூறவேண்டும். சிறையின் கஷ்டம் எனக்கு நன்கு தெரியும். எனக்குக் கிருஷ்ணன் இன்பமூட்டுகிறார். எனது நலம் கருதி அவரை வாழ்த்துகிறேன் வரவேற்கிறேன்." என்று கூறி மேடை மீதே ஒருவரையொருவர் தழுவிக் கண்மூடிக் களித்தனர்.

### ஜூபிடர் பிக்சர்ஸ் உழைப்பாளிகளின் வரவேற்பு.

கோவை ஜூபிடர் பிக்சர்ஸ், ஸென்டிரல் ஸ்டூடியோ ஆகியவைகளைச் சார்ந்த உழைப்பாளிகளின் சார்பில் ஓர் நீண்ட, அழகிய, வரவேற்பைச்சினி டைரக்டர் தோழர் ஏ. எஸ். ஏ. சாமி வாசித்து, ஓர் வெள்ளிப் பேழையுடன் அதை தோழர் என். எஸ். கே. யிடம் அளித்தார்.

### தோழர் என். எஸ். கே. யின் பதில்.

தோழர் என். எஸ். கே. புன்முறுவல் கலந்த களைப்புடன் எழுந்து, "என்னை வானளாவப் புகழ்ந்தீர்கள். நான் கல்லாயிருந்தேன், சாமிபோல. சாமி கல்லாலடிக்கப்பட்டிராவிட்டால், அன்பர்களின் அபிஷேகத்தால் கரைந்துபோய்விடுமல்லவா? நீங்கள் புகழ்ந்த புகழ்ச்சியில் கரையாமலிருக்க நானும் கல்போல் உட்கார்ந்திருந்தேன்." என்றஹாஸ்யத்துடன் பிரசங்கத்தைத் தொடங்கினர்.

### சிறை சென்ற காரணம்.

பொது மக்களில் பலர் பலவிதமான கடிதமெழுதினர். உங்கள் விருப்பப்படி நான் சிறை செல்ல நேர்ந்தது. மறுபடியும் சிறையிட்டதைக் கண்டித்துப் பலர் கிளர்ச்சி செய்தனர், கடிதம் எழுதினர். உங்கள் அன்பாலேயே வெளியே வந்தேன். பொதுஜன ஆதரவு இருந்ததால், பொதுஜன விருப்பப்படி விடுதலை பெற்றேன். நண்பர்கள் எனது விடுதலைக் கிளர்ச்சியைஆரம்பித்தனர் அன்னாருக்கும் பொதுமக்களுக்கும் பாகவதருடையும், என்னுடையவும் நன்றி.

### அன்று என்ன செய்தனர்?

இன்று இங்குள்ள சினிமா நடிகர்கள் எனக்கு வெள்ளிப் பேழையில் உபசாரமளித்தனர். எனக்கு இப்பொழுது வெள்ளிப்பேழை கொடுக்க பணக்காரர்களிருக்கிறார்கள். நான் சிறையில் வதங்குகை

யில், இந்தச்சினிமாத் தொழிலாளர் விடுதலைக் கிளர்ச்சியில் ஏன் பங்கு கொள்ளவில்லை. அன்று அவர்கள் எங்கே சென்றனர்? (உண்மையில் சற்றுக்கோபமாகவே) வேறொரு தொழிலாளிக்கு இதுபோல் நேர்ந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? நமக்குள் ஒற்றுமை வேண்டாமா? இனியாகிலும் அனைவரும் ஒன்று படுவார்களாக என்று கோபமாகவும், அனுதாபத்துடனும் பேசினார்.

"கஷ்டப்படுவனைப் பார்த்து மகிழ்வதே பொதுவாக மக்களின் நடைமுறைப் பழக்கமாக இருக்கிறது. அதை மாற்ற முயல்வோமாக" என்று மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்.

"அந்தக் குரல்"

தனது தண்டனைபற்றிக் குறிப்பிட்டுப் பேசுகையில், '20 வருஷ தண்டனை என்றகுரல் காதில் விழுந்ததுதான் தெரியும், மறுநாள் காலைதான் கண்விழித்தேன். அப்பொழுது சிறையிலிருப்பது கண்டேன். பாகவதர் அதற்கு மறுநாள்தான் கண்விழித்தார். (சிரிப்பு.) வருத்தம் 2, 3, நாள்கடுமையாக இருந்தது. 'நாம் குற்றம் செய்யாததால் விடுதலை பெறுவோம்' என்ற எண்ணமிருந்ததால் வருத்தம் குறையத்தொடங்கியது." என்றுவர்ணித்தார்.

தமாஷாக, "ரேஷன் கஷ்டம், வேலைக் கஷ்டம் ஒன்று மில்லாமல் எங்கள் கஷ்ட காலம் போகும்வரை எங்களைச் சிறையில்காத்து வெளியே அனுப்பியதற்கு அரசாங்கத்திற்கு நன்றி" என்றும் கூறினார். முடிவாகப் பேசுகையில் தனது வாழ்வில் பணம், அந்தஸ்து, பொதுமக்கள் ஆதரவு எதிலுமேதான் முதல்வரிசையிலேயே இருந்ததாகவும், அதைப்போல் தண்டனையிலும் தனக்கு மிகவும் உயர்ந்த ஸ்தானம் கிடைத்ததாகவும் (20 வருட தண்டனை) கூறி, சிறைவாசத்தால் தான் பல விஷயங்களை அறிந்து கொண்டதாகவும், யார் யாரிடம் எப்படிப்பழகவேண்டுமென்பதைச்சிறைவாசம் நன்கு கற்பித்துக் கொடுத்துள்ளதாகவும், முன்பிருந்த ஆர்வத்தைவிட நூறுமடங்கு ஆர்வம் அதிகமாக இருப்பதாகவும், குறிப்பிட்டார். அனைவருக்கும் நன்றி செலுத்தி அமர்ந்தார்.

அண்ணாத்துரை பேச்சு

'வேலைக்காரி' நாடக ஆசிரியரான சி. என். அண்ணாத்துரை அடுத்தபடி பேசுகையில், "மகிழ்ச்சிகரமான வரவேற்பில் கலந்து கொண்டதற்கு மகிழ்ச்சி. தோழர் என். எஸ். கே. க்கு எல்லா நகரங்களிலும் இதுபோன்ற வறவேற்பு அளிக்கப்படவேண்டும். நடிக சகோதரர்களது ஒற்றுமை உணர்ச்சியைப் பாராட்டுகின்றேன். மக்கள் மனதிலுள்ள மாறுதலைக்காண இதுபோன்ற கூட்டமே முக்கியமானது.

தோழர் கிருஷ்ணன், தண்டனையைக் கேட்டு ஒருநாள் மயக்கத்திலிருந்ததாகக்கூறினார். தமிழ் நாடே ஒரு நாள்மயக்கத்திலிருந்தது. பண்புள்ள தமிழர் பலர் கண்ணீர் விட்டிருப்பர் என்று கூறினார். நடிக சகோதரர்கள் விடுதலைக் கிளர்ச்சியில் சேரவில்லை என்று தோழர் கிருஷ்ணன் கூறியதைக் குறிப்பிட்டு, சக்திக்கு மீறியதென தொழிலாளிகள் ஒதுங்கியிருந்திருக்கக் கூடும். அதனால் அவர்களது அன்பைக் குறை கூறக் கூடாது. பலநடிகர் வருந்தியதுண்டு.

சட்டத்தின் முடிவிற்கு அனைவரும் காத்திருந்தனர். விடுதலைக்கான கிளர்ச்சியில் 100-க்கு 70 பேர் சேர்ந்திருந்தனர். வெற்றி பெற்றோம்.விடுதலைகிடைத்தது. மாசின்றி வெளியே வந்தீர்கள். இல்லையேல், தக்க கிளர்ச்சி தொடங்கியிருககும். அதில் நடிக வாலிபர்கள் முன்னணியில் இருந்திருப்பார்கள்" என்று கூறினார். மேலும் பேசுகையில், "காங்கிரஸ் முதலிய பலதரப்பட்ட அரசியல் வாதிகள் விடுதலை வேண்டி ஒன்று சேர்ந்து கூட்டம் கூட்டியதைக் குறிப்பிட்டு, தமிழ் நாட்டின் ஆதரவைச் சிறைவாசம் பெற்றுக் கொடுத்தது. அது லாபக் கணக்கு" என்றும்கூறினார்.

தாங்கள் அடைந்ததைப் போல, எந்தக் கலைவாணரும் தமிழ் நாட்டினரின் கண்ணீரைப் பெற்றதில்லை. சுகம் தேடிக்கொள்வதால் கிடைக்கிறது. துக்கம்பிறர்செய்வதால் உண்டாகிறது. அது பங்குபோடக்கூடியது. தாங்கள் அனைவரது உள்ளத்தையும் கொள்ளை கொண்டதால், துக்கத்தையும் அனைவரும் பங்கிட்டுக் கொண்டனர். நடிகராக உள்ளே சென்ற கிருஷ்ணன் பேச்சாளனாக வெளியே வந்துள்ளார். வருங்காலத் தொழிலாளியின் தலைவன். தலைவராக ஆவதற்கு, முன்பே பண்பு இருந்தது. இப்பொழுது பயிற்சியுமேற்பட்டு விட்டது." என்று மேலும்பேசுகையில் கூறினார்.

கடைசியாக, 'சிறைவாசம் கிருஷ்ணனை வேதாந்தியாகஆக்காமலிருக்க வேண்டு'மென்று கூறி முடித்தார். தோழர் ஏ. எஸ். ஏ. சாமி நன்றிகூறினார்.

"வேலைக்காரி" படப்பிடிப்பு

ஆரம்பவிழா

வரவேற்புவிழா முடிந்தபின், வழக்கமான ஆரம்பச் சடங்குகள் நடைபெற்றது, ஜூபிடரில் 'வேலைக்காரி' படப்பிடிப்பு ஆரம்பவிழா நடைபெற்றது.

நகைச் சுவை அரசு தோழர் என். எஸ். கே., "வேலைக்காரி" நாடகத்தின் நோக்கத்தையும், அதைஎழுதிய தோழர் அண்ணாத்துரையின் திறமையையும் பாராட்டிப்பேசி, இதைப் படமெடுக்க முன்வந்த ஜூபிடர்பிக்சர்சாரைப் பெரிதும் புகழ்ந்தார்.

ஆசிரியர் அண்ணாத்துரை, அடுத்தபடியாய் பேசுகையில், மனிதன் சூழ்நிலையாலேயே நல்லவனாகவும் கெட்டவனாகவும், ஆகிறானென்ற கருத்தையே, "வேலைக்காரி" நாடகம்விளக்குகிறதென்றும், நாட்டிற்கு நல்லதெனத் தனக்குத் தோன்றியதை நாடகத்தில் அமைத்திருப்பதாகவும் குறிப்பிட்டார். தோழர் பழனிசாமி அவர்களும் விழாவில் கலந்து கொண்டார். டைரக்டர் ஏ. எஸ். ஏ சாமி புரட்சிகரமாக இப்படத்தை எடுக்க முயற்சிப்பதாகவும், என். எஸ். கே. யேதனது குருவென்றும் கூறி, நன்றி செலுத்தினார். இப்படத்தில் தோழர்கே. ஆர். ராமசாமி தோழியர் டி.ஆர். ராஜகுமாரியும், நடிப்பார்களெனத் தெரிகிறது. ஏராளமான வாழ்த்துத் தந்திகள் வந்தன. தேநீர் விருந்தும் நடைபெற்றது.

## அடேயப்பா!

பியோரிலோ லாகார்தியா என்பவர் லட்சம் டாலர் மான நஷ்டம் தரவேண்டுமென, வீடு சொந்தக்காரர் சங்கத்தின் தலைவர் பின்ஸ் மீது வழக்குத் தொடுத்திருக்கிறார். பின்ஸ் வெளியிட்ட ஒரு பிரசுரத்தில், லாகார்தியாவும், ஹென்றி வாலசும், கம்யூனிஸ்டுகளென்றும், தேசீய குடிக்கூலி சங்கத்திற்கு ஆதரவு காட்டுகிறவர்களென்றும் அதில் குறிப்பிட்டிருக்கிறதாம். இதற்காக மான நஷ்டம் கோருகிறார். அடேயப்பா கம்யூனிஸ்ட் என்றாலே இந்த அமெரிக்கருக்கு இவ்வளவு மானம் போய்விடுகிறதே!

2-ம் பக்கத் தொடர்ச்சி

யென்றால் "யாதொரு தெய்வம்" என்பதன் பொருள்தான் என்ன? பச்சையாக ஏமாற்றுவதைத் தவிர, இதற்கு யாதாயினும் பொருள் கற்பிக்க முடியுமா? சமண சமயத்தில் நின்று அச்சமயக் கடவுளை வழிபட்ட போதிலும், மாதொரு பாகனான சிவனே வந்து அருள் பாலிப்பான் என்பதில் சைவர்களுக்கு நம்பிக்கை இருந்தால், சமணம் பௌத்தம் முதலான சமயங்களை ஒழிப்பதில் முனைவானேன்? அதற்காகத் தனித்தனி அவதாரங்கள் எடுப்பானேன்? ஆண் பனையைப் பெண்பனையாக்கிக் காட்டும் அலங்கோலச் செயலில் இறங்குவானேன்?

விரிந்த மனப்பான்மையும் பரந்த நோக்கமும் இன்றிப், பொறாமையையே முன்னிலைப்படுத்தி வேறொரு சமயத்தை உண்டாக்கி, இதுவே மெய்யான சமயம் என்று கூறினாலும், அதுவும் எம்பிரானான சிவனுக்கு ஏற்றதாகும் என்பது,

"விரிவிலா நெஞ்சினார் எரிவி
னால்வேறோர் சமயஞ்செய்து
சொன்னாரேனும் எம்பி
ராற்கு ஏற்றதாமே."

என்பதால் விளக்கப்பட்டிருந்துங்கூட, இவற்றிலெல்லாம் நம்பிக்கை கொள்ளாமல், பிற சமயங்களை எல்லாம் ஒழிப்பதில், சைவ சமயிகள், தங்களிடம் இயல்பாக அமைந்துள்ள பொறாமை என்னும் பெரும் பொருளைத் துணையாகக் கொண்டு காரியமாற்றியதன் காரணம் தான் என்ன என்பதைச் சிறிது அறிவைக் கூர்மையாக்கி ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு விளங்காமல் போகாது. இந்த அழகில், "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற பொது விதியைக் கூடச், சைவர்கள் தங்களுக்கே உரிமையாக்கி, ஊருக்குரைத்து உளம் மகிழ்ந்து பொங்கி வழியும்ஆனந்தம்கொண்டு ஆடித்திரிவதுதான் வேடிக்கையிலும் வேடிக்கை. இத்தகைய அலங்கோலம் அன்றைய சைவர்களிடம் மட்டுமே இருந்ததென்று நினைக்க வேண்டாம். இன்றைய சைவப் புலவர்களிடமும் இது மலிந்து காணப்படுகின்றது. எடுத்துக் காட்டாக ஒரு நிகழ்ச்சியை மட்டும் எடுத்துக் காட்டுகிறேன்.

அதாவது, மராமரங்களைத் துளைப்பதற்காக இராமனால் விடப்பட்ட அம்பு குறிப்பிட்ட ஏழு மராமரங்களையும் துளைத்து, ஏழு கடலையும் துளைத்துப், பிற அனைத்தையும் துளைத்துப், பின் துளைப்பதற்கு, எதுவும் காணப்படாததால், அந்த அம்பு திரும்பவும் வந்து இராமனுடைய அம்புறாத்தூணியில்புகுந்து கொண்டது என்று கம்பராமாயணத்தில் பேசப்படும் நிகழ்ச்சியை ஒரு வடிகட்டிய பொய் என்று கூறி, அதற்கு மேற்கோளாக, ஒரு தமிழ் மன்னன், ஒரு பன்றியின் மீது எய்த அம்பானது, அப்பன்றியைத் துளைத்துப், பக்கத்தில் படுத்துக்கிடந்த ஒரு யானையையும் துளைத்து மேலுஞ் சென்று ஒரு மரத்தில் மோதி அதனைத் துளைக்க முடியாது நின்றுவிட்டது என்று ஒப்புவமை காட்டி இராம பாணத்தின் இயற்கைக்கு மாறான செயலை, இன்றைய சைவப் புலவர் ஒருவர் விளக்கியுள்ளார். இந்த உண்மையை மக்கள் அறிந்து இராமயணத்திலுள்ள பொய்மைகளை உணரும்படிசெய்த புலவர்பெருமகனாருக்கு நமது நன்றியும் பாராட்டுதலும் உரித்தாகுக.

ஆனால், இதே புலவர், பெரியபுராணத்துள் நுழையும் போது, கம்பராமாயணத்துள் நுழைந்த சமயத்தில் தம்மிடமிருந்த பொதுவான ஆராய்ச்சி அறிவை யாருக்கோ இரவல் கொடுத்துவிட்டு, தன்னலங் கலந்த குறுகிய அறிவை விரிவாக்கிக் கொண்டு, பெரியபுராணத்தை ஆராயத்தொடங்கி, ஆண்பனை பெண்பனையான நிகழ்ச்சியிலிருந்து ஆற்றிலிட்ட ஏடு எதிர்நோக்கிச் சென்றதென்பது வரையிலுள்ள அறிவுக்கும் இயற்கைக்கும் பொருந்தா நிகழ்ச்சிகளெல்லாம் தினைத்துணையும்பொய் கலவாத மெய்யான—உண்மையாக நடந்த நிகழ்ச்சிகள் என்று நாக்கூசாது கூறிமுடிக்கிறார்.—ஆண்பனை பெண்பனையானதும்,ஆற்றிலிட்டஏடு எதிரேறிச்சென்றதும் அரனருளால் நடந்தவை என்பதை நம்பி நமக்குரைக்கும் இப்புலவர் பெருமகனார், மராமரங்களைத் துளைப்பதற்காக இராமனால்விடப்பட்ட பாணம்,அரியின் அருளால் அவ்வாறு செய்திருக்காதா என்பதை ஒப்புக்கொள்ள மாட்டேன் என்கிறார். இதற்குக் காரணம் என்ன?சைவத்திடம்அவர் கொண்டுள்ள அளவுகடந்த பற்றுதலும், வைணவத்திடம் கொண்டுள்ள பொறாமையோடுகூடிய வெறுப்புமேயாகும்.

எனவேதான், சைவம் வைணவம் ஆகிய இரண்டு சமயங்களும் ஒன்றுக்கொன்று பூசல்கொண்டு, மக்களிடையேயுள்ள ஒற்றுமையைக் குலைத்து அவர்களின் நல்வாழ்வைச் சிதைக்கும் முறையில் அமைந்திருக்கின்றனவென்றும், ஆகவே, இவ்விரு போலிச்சமயங்களுக்கும் அடிப்படையாய் நின்று நம்மவரிடையேபிளவையும் பேதைமையையும் உண்டாக்கும் நூல்களான பெரியபுராணமும் கம்பராமாயணமும் ஒழிக்கப்படவேண்டுமென்றும் கூறுகின்றோம். இதில் என்ன தவறு?

இனி,இத்தகைய பரிசோதனைகள் செய்து காட்டுவதன் வாயிலாகச் சைவசமயத்தை நிலைநாட்ட முயல்வது, சைவர்களுக்கே தங்கள் சமயத்தில் நம்பிக்கை இல்லை என்பதையன்றோ கர்ட்டுகின்றது. சைவர்களுக்கு மட்டுமென்ன! சைவசமய ஆசிரியரான சம்பந்தருக்கே அந்த நம்பிக்கை இல்லாத காரணத்தால் தான், எப்படியாவது—எதையாவது செய்துசைவத்ததை நிலைநாட்ட வேண்டுமென்ற கவலை இருந்ததென்பது திட்டமாகத் தெரிகிறது. தம்முடையசைவம் இப்படிப்பட்டது—இன்னின்ன இயல்புகளோடு கூடியது என்பதை எடுத்துக்காட்டி விளக்கத் தம்மிடம் சரக்கில்லாத காரணத்தால்தான், ஆண்பனையைப் பெண்பனையாக்கலாமா? ஆற்றிலிட்ட ஏட்டை எதிரேறிச் செல்லும்படி செய்யலாமா? இறந்தவனை எழுப்பலாமா? திறந்த கதவை மூடிக்காட்டலாமா? தீயிலிட்ட ஏட்டை எரியாமல் இருக்கச் செய்யலாமா? எலும்பைப் பெண்ணாக்கலாமா? என்பன போன்ற அறிவுக்கொவ்வாக் கண்கட்டு வித்தைகளைக்கையாளவேண்டியிருந்தது. இத்தகைய இரங்கத்தக்க நிலையைச் சம்பந்தருக்கு உண்டாக்கிய சைவத்திற்குத் தக்க தண்டனை தரவேண்டுமென்றுகூட நமக்குத் தோன்றுகிறது. தனக்கென ஒரு கொள்கையோ திட்டமோ, வரம்போ இல்லாமல், அவ்வப்போது ஒவ்வொன்றைக் கூறியும், செய்து காட்டியும், "இதுதான் சைவம்—இப்படிச் செய்யக் கூடியது தான் சைவம்" என்று அல்லற்பட்ட ஒரு சமயத்தை வேறெங்கும் காண முடியாது. உலகில் எத்தனையோ சமயங்கள் உள்ளன. அவை

(9-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

காஞ்சி] 1—6—47 ஞாயிறு

# ஆறும் ஆண்டு

ஆம்! "திராவிடநாடு" இதழுக்கு ஆண்டு ஐந்து முடிந்துவிட்டது. ஆறும் ஆண்டில் புகுந்திருக்கிறது. மலர் தூவிய பாதையில் நடந்து வரவில்லை இந்த ஐந்தாண்டும். எத்தனையோ எதிர்ப்பு, இருதயம் பிளக்கக்கூடிய பரிகாசப்பேச்சு — கொதிப்பேறக்கூடிய அளவிற்குக் கோமாளிக் கண்டனக்கிண்டல் — இவ்வளவும் நமக்குப் பரிசாகக் கிடைத்தன, நமது நோக்கையும் போக்கையும் தெரிந்து தெளிவுபெறாதாரிடமிருந்து. இருந்தாலும் நமக்கு ஆத்திரமோ, சோகமோ, சோர்வோ ஏற்பட்டு விடவில்லை மேலும், மேலும் தமிழர்கள் காட்டிய ஆர்வத்தாலும் ஊக்கத்தாலும்.

"திராவிடநாடு" வியாபாரப் போக்கிலேவெளிவந்ததல்ல. வீழ்ச்சியுற்ற திராவிட இனத்திற்கு, விஞ்ஞான வெளிச்சத்தைக் காட்டி, வேதனை வாழ்விலிருந்து வெளியேறும் அரும் பெருஞ்செயலையேமுலப் பணியாகக்கொண்டு முடிந்தவரையில் தொண்டு செய்வதெனும் நல்ல நோக்கத்தோடு தோன்றியதாகும். இத்தகைய தொண்டால், தங்கள் வாழ்வுக்கு வீழ்ச்சி ஏற்படுமோ என வெம்பிய மனத்தினர் சிலர், சீறியெழுந்து சினந்துகூறிய புல்லுரைகளுக்கெல்லாம்பொருத்தமானபதில் கூறியும், விளக்கம் வேண்டிவிரும்பி நின்றவர்களுக்கு நயமான போக்கில் விஷயவிளக்கஞ் செய்தும், வைதிகத்தைச்சாடியும், தொழிலாளர் துன்பத்தைத் துடைக்கவும், அரசியல் போக்கை அனைவருக்கும் புரியும் வகையில் தெளிவாகக்கூறியும் 'திராவிடநாடு' சென்ற ஆண்டுகளில் தொண்டாற்றி வந்திருக்கிறது.

சென்ற ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட மாறுதல்கள் ஏராளம். மற்றக் கட்சியினர் பார்வை நமது திராவிடர்கழகத்தின்பால் வீழ்ந்தது குறிப்பிடத்தகுந்ததாகும். கருத்து மாறுபாடுடன் தோன்றித் தொண்டாற்றி வரும் மன்றங்களிலும் நமதுதோழர்கள் குரல் இடம்பெற்றது. பலகட்சியினர்க்கும் பொதுவாகஉள்ளசிக்கல் தீர்ந்துவிட்ட, சில பலபொதுப்பிரச்னைகள்பற்றி எடுத்துக் கூறுமாறு, நமது தோழர்களைக் காணவும் அஞ்சிய கழகங்களிலிருந்தும், நமது தோழர்களுக்கு அன்பழைப்புக் கிடைத்ததுண்டு. இதில் 'திராவிடநாடு' மட்டற்ற மகிழ்ச்சியும், பெருமையும் கொள்ளுகிறது.

பெரும்பாலான விஷயங்களில் ஒற்றுமையும், ஒன்றிரண்டு கருத்தில் மாறுபாடும்—அதுவும் பழகுவதால் மாறிவிடக்கூடியதுமான — போக்குடையாரிடம், இன்முகம் காட்டி, இனியவை கூறி ஒன்றுபடுத்தும் ஒற்றுமைப் பாதையை செப்பனிடுவதில் சிறந்த தொண்டு புரிந்திருக்கிறது 'திராவிடநாடு' சென்ற ஆண்டில். இதனைக்கண்டு சிரித்தோர்சிலர் —அஞ்சினோர் ஓர் இருவர் — சீறினோரும் சூழ்ச்சியெனமுணுமுணுத்தோரும் உண்டு. இதனைக் கண்டு நாம் சினங்கொள்ளவில்லை, சிலநாள் சென்றபின்னர் உண்மை அறிவர், முன்னாள் செயலுக்கு வருத்தமும் படுவர் என்ற நம்பிக்கை நமக்கு இருப்பதால்.

தமிழ்ப்பத்திரிகை உலகில் 'திராவிடநாடு' அளவில் சிறியது; ஆண்டில் இளையது. இருந்தாலும் எதிர்பாராத இடத்திலிருந்தெல்லாம் அதற்கு வரவேற்புச் சென்றஆண்டில் கிடைத்திருக்கிறது. பேனா பிடித்தவர்களிடம் எல்லாம் புதுமுறுக்கையும், புரட்சிக்கருத்தையும் தோற்றுவிக்கும் அளவிற்கு அன்போடு அவர்களை அணைத்துக்கொண்டிருக்கிறது 'திராவிடநாடு.' பெரியார் பெரும்படையின் பக்கம் அன்னார்களின் உழைப்பு உருவாகும் நாள் விரைவில்வந்துக்கொண்டிருக்கிறது. என்னுடன்வர யார் இருக்கிறார்கள்? எவர் வருகிறார்கள் எனப்பெருமூச்செறிந்து சலித்துக்கூறும் பெரியார், இந்நிலையைக்கண்டு உள்ளம் பூரிப்பார், தளர்ந்தஉடல் உரம் பெறுவார் என்பதில் துளியும் சந்தேகமில்லை.

"நாட்டு விடுதலை" எனஇதுவரை காங்கிரஸ் பேசிவந்த பேச்சுக்கு இனித்தேவை இல்லை என்கிற சூழ்நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது. பம்பாய் தொழில் மன்னர்களின் அணைப்பிலிருந்து தன்னை விலக்கிக்கொண்டு காங்கிரஸ் தொண்டாற்ற வேண்டும். இல்லையேல் காங்கிரஸ் கலைக்கப்படவேண்டும்; இந்த இரண்டையுஞ்செய்யப்போவதாகச் சொல்லக்கூட காங்கிரஸ் முனையவில்லை. நலிந்த ஏகாதிபத்யத்தின் தயவால் நாட்டாட்சி ஆலை அரசர்களின் கைக்கு மாறுகிறது. மக்கள் ஆட்சி விரும்புவோர் வெறுக்கக்கூடிய செயல் இது. தூய சிந்தனை பரிசுத்த உள்ளம், வீரஉரை மட்டும் வரவிருக்கும் கேட்டை விலக்கிவிடாது. எனவே மக்கள் நல்லாட்சியில் நாட்டமுடையோர் அனைவரும் ஒன்றுபட்டு நல்லதோர் திட்டம் வகுக்கவேண்டும். 'திராவிடநாடு' இத்துறையில் சலியாதுதொண்டாற்றும்.

"பாகிஸ்தான்" பகற்கனவல்ல இன்று. படைபலமும், பணபலமும் அதற்கெனத் தனியாக அமைக்கப்படவேண்டுமென்பது முடிவாகிவிட்டது. வங்கத்தைத்துண்டாடு— பாஞ்சாலத்தைப்பிள — எல்லைப்புறத்தைத் தனியாக்கு எனும் பேச்சைக்கிளப்பி பாக்கிஸ்தான் நிலப்பரப்பில் பண்ணை அமைக்கிறார்கள் ஹிந்துஸ்தான்வாதிகள். இந்த முயற்சி பலிக்குமா? பலிக்காதா? ஆருடம் நாம் அறியோம்! ஆனால் இதன் விளைவு, தோழர் ஜின்னா இணைப்புப்பாதை கேட்கும் நிலையில் வந்து முடிந்தது, கிணறு தோண்ட பூதம்புறப்பட்டது போல!

திராவிடம் தனிநாடாவதில்தான் இனிஇங்குள்ள இஸ்லாமியத்தோழர்களின் ஏற்றம் இருக்கிறது. நாம் ஒரேஇனம். வரலாறுஇதற்குஅரண். பிளவுபடுத்திப்பார்ப்பதும் பேசுவதும் தெளிவு ஏற்படாததால் வந்த வினை. எனவே இஸ்லாமியர்களின் முழுக்கொண்டும் திராவிட நாடு, தனிநாடாக அமைப்பதில் ஈடுபடுத்தப்படவேண்டும். ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை நமக்கிருக்கிறது. அதற்கான போக்கில் "திராவிட நாடு" முன்னிலும் அதிகமாகத் தொண்டாற்றும்.

மற்றோர் பெரு மகிழ்ச்சிக்குரிய செய்தி, மூடுபனியால் உருவம் விளங்காமல் இருந்த கலை உலகம், இருகலைஞர்களின் விடுதலையால் விளக்கம் பெற்றுவிட்டது. 'திராவிடநாடு' தம் சக்திக்கேற்ப நல்லெண்ணத்துடன்—நம்பிக்கையுடன் துவக்கிய கிளர்ச்சி வீண்போகவில்லை. குற்றமற்றவர்களென விடுதலை பெற்றுவிட்டனர். அவர்களுக்குத் தமிழர்கள் சார்பில் மகிழ்ச்சியைத்

தெரிவித்துக்கொள்கிறது 'திராவிட நாடு.'

"திராவிடநாடு" வனப்புடன் திகழ முயற்சித்துள்ளோம். வசதிக் குறைவு, மேலும் கவர்ச்சியுடைய தாகச் செய்யமுடியவில்லை. சிற்சில இயந்திர வசதியை உண்டாக்கிக் கொண்டால், தோழர்கள் திருப்தி கொள்ளுமாறு செய்யலாம். கருத் துண்டு. காலமும் நிலையும் தற்சமயம் இடங்கொடுக்கவில்லை. இருந்தாலும் முயற்சியில் நாம் குன்றவில்லை.

சென்ற ஆண்டில் 'திராவிடநாடு' தமிழர்களின் பேரன்பை அதிகமாகப்பெற்றிருக்கிறது. அதற்காக நமது நன்றி. மேலும் அவர்கள் ஆதரவுதேவை. தமிழர்களுக்கு இதுவே நமது வேண்டுகோள்.


ஏஜண்டுத் தோழர்களின் ஒத்துழைப்பில் குறைவில்லை. இருந்தாலும் வாசகத்தோழர்கள் பலர், அவர்களுக்குக்கொடுக்கும் தொல்லை, பலர் நினைக்கிறபடி பத்திரிகையை நல்ல முறையில் கொண்டுவருவதற்கு, பொருளாதாரத்துறை நமக்கு இடந்தரவில்லை. இதனைப் பொதுவாக ஏஜண்டுத் தோழர்களும், குறிப்பாக வாசகர்களும் கருத்தில் வைக்க வேண்டுகிறோம். கட்டுரை நல்கிய நண்பர்களுக்கும், வாரந்தவறாமல் வெளிவர ஒத்துழைத்த அச்சக அலுவலகத் தோழர்களுக்கும் நமது அன்புகலந்த வணக்கத்தை உரிமையாக்குகிறோம்.

●

7-ம் பக்கத் தொடர்ச்சி

யெல்லாம், தத்தமது உண்மை நிலையினை விளக்க இச்சைவசமயம்போல் அவதிப்பட்டதேயில்லை இது, தன்னை 'இன்னது—இப்படிப்பட்டது' என்பதை விளக்க அல்லது நிலைநாட்ட எடுத்துக்கொண்ட முயற்சிகள் அளவற்றன. எத்தனை வேதங்கள்—எத்தனை ஆகமங்கள்— எத்தனை உபநிடதங்கள்—எத்தனைபுராணங்கள்—எத்தனை இதிகாசங்கள்—எத்தனை திருமறைகள்—எத்தனை சித்தாந்தங்கள்! இன்னும் பலப் பல! இவ்வளவு செய்தும் கடைசியில் கண்ட பயன் என்ன? சைவத்தின்பால் பெருவாரியான மக்களுக்கு நம்பிக்கையில்லை என்பது, சைவத்தை நிலை நாட்டவந்த சம்பந்தர் தோன்றிய தமிழ் நாட்டிலேயே இன்று பற்பல சமயங்கள் தோன்றி, அசைக்க முடியாத நிலையைப் பெற்றுவிட்டதிலிருந்து தெரிகிறது. சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகிய சைவசமயாசிரியர்களால் ஒழிந்துக்கட்டப்பட்டதாகச் சொல்லப்படும் சமண, பௌத்த சமயங்கள் கூட இன்னும் நம் நாட்டில் நிலை பெற்றிருப்பது கண் கூடு. அதோடு சைவத்திற்குப் போட்டியாக வந்த வைணவமும், பல ஆயிரம் கல் தொலைவுக்கு அப்பால் இருந்து வந்த கிறித்தவமும், இஸ்லாமும் சைவ சமயிகள் பல்லாயிரவரைத் தங்கள் தங்கள் மதங்களில் சேருமளவுக்குச் சைவம் தன் பலவீனத்தைக் காட்டிவிட்டது. இவையெல்லாம், சைவத்தின்பால் மக்களுக்கு நம்பிக்கையில்லை என்பதைத் தவிர, வேறு எதனைக்காட்டுகின்றன. இன்று நந்தமிழ நாட்டில் வாழும் கிறித்தவர்களும் முசல்மான்களும், வைணவர்களும், புத்தர்களும் வேறு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவர்களல்லவே! அவர்களும் இத்தமிழ் நாட்டவர்—தமிழர்கள் தானே! ஏன் அவர்கள் எல்லாரும் சம்பந்தர் காட்டிய சைவத்தின் வழி நில்லாமல், ஏசுவையும், புத்தரையும், அல்லாவையும், திருமாலையும் பின்பற்றி நிற்க வேண்டியவர்களானார்கள்? இவற்றையெல்லாம் ஏன் நம்முடைய சைவப்புலவர் பெருமக்கள் எண்ணிப்பார்ப்பதில்லை? பொருமையினால் வேறு சமயம் செய்து வழிபட்டபோதிலும் அவ்வழிபாடு சிவனையேசாரும் என்றுகூடச்சொல்லிப் பார்த்தார்களே! முடிந்ததா? சைவத்திற்கு முற்றிலும்புறம்பானமற்றைச் சமயங்களைப் பற்றிப் பேசாவிட்டாலுங்கூடச், சைவத்திற்கு நெருங்கிய உறவும்தொடர்பு கொண்டவைணவ சமயத்தை எடுத்துக் கொள்ளுங்கள்; "சிவசிவா" என்றஒலி கேட்டாலே, அதனைப் பெரியகுற்றமாகத்-தீட்டுப் பட்டு விட்டதாக எண்ணி இருகாதுகளையும் பொத்திக்கொண்டு, குளத்திலிறங்கிக் குளித்துத் தம்மைப் புனிதப்படுத்திக் கொள்ளும் திருமாலன்பர்கள் எத்தனையோ பேர் நந்தமிழ் நாட்டிலிருக்கின்றனரே! ஏன் இந்த நிலை? எதனால் ஏற்பட்டது? இவையெல்லாம் சைவத்திற்குப் புனிதத் தன்மையும் மதிப்பும் காட்டும் செயல்களா? என்பதை எண்ணிப் பாருங்கள். முடிவுகூறுங்கள்.

*




## தங்க வாள்!

பிணவாடை—இரத்தச் சேறு நரிகளின் ஊளை—கழுகுக் கூட்டங்களின் விருந்து மேடை—இது அன்றையபோர்க்களச் சித்திரம். வீரனின் வாளின் கூர்மையால் விளைந்த படுகளம் இது. களம் பல கண்ட வீரனுக்கு வாள்பரிசு வழங்கப் படும்; வழங்குவதும் முறை.

பாருங்கள் டாக்டர் வரதராஜுலுவுக்கும் அந்த யோகம் கிடைத்து விட்டது. போர்க்களம் புகாதவர்; இருந்தாலும் வாள் பரிசு கிடைக்கிறது. ஆனால் வீரன் ஏந்தும் வாள் அல்ல அது. தங்கவாள் தரப்படப் போகிறது. வீரன் கை வாள் துண்டானால், வெறும் இரும்புத் துண்டாக மதிக்கப்படும். டாக்டருக்குத் தரப்படும் வாளோ, வேண்டுமென்றே துண்டு துண்டாக வெட்டினாலும் மதிப்புக் குறையாது. இதையாவது இவர் செய்வாரா? போரிட வேண்டுமெனத் திடீர் திடீர் எனப்பாட்டிசைத்தவர்க்குத் 'தகுதியான' பரிசுதான்...

(1

## நீதியும்—நிறமும்

அவன் நிறம் கருப்பு; கொன்றவர்கள் நிறம் வெள்ளை இருபத்திமூன்று வயது; இளம்பிராயம். அவன் ஒருவன்; கொன்றவர்கள் இருபத்தெட்டுபேர். வெளியே உலாவிக் கொண்டிருந்தவனா அக்கருப்பன். இல்லை, சிறைப்பறவை. வேறுகுற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டு, சிறையில் இருந்தவன். காவல்கட்டில்லையா? இல்லாமல் இருக்குமா? இருந்தது, பலனில்லை. அவன் கருப்பன் ஒரு நீக்ரோ! அவனை, அவ்வெள்ளையர்கள் வெளியே தூக்கிவந்து சித்திரவதை செய்து தீர்த்துவிட்டனர். காரணம், ஒருவெள்ளைடிரைவரைக் கொன்றிருப்பான் எனும் சந்தேகம் அவர்களுக்கு. எங்கு நடந்தது என்று கேட்கிறீர்களா?

தென்கரோவினாவில் பக்கின்ஸ் எனும் ஊர். அங்கு வில்லி எர்லிஎனும் நீக்ரோ ஒரு டாக்சி டிரைவர். சிறையிலே வேறு குற்றத்திற்காகத் தண்டனை பெற்றிருந்தான். தங்களிலே ஒரு வெள்ளை டிரைவரைக் கொன்று விட்டான் எனும் சந்தேகம் இவர்களுக்கு. எனவே இந்த அடாத செயலைச் செய்தனர் அத்துமீறி. பத்து நாள் வழக்கு நடந்தது, முடிவில் தீர்ப்பு விடுதலையைக் கொடுத்தது வெள்ளையர்களுக்கு.

98-குற்றச்சாட்டுகள் அந்த வெள்ளையர்கள் மீது. இருந்தாலும் ஜூரர்கள் குற்றமற்றவர்களெனத் தீர்ப்பளித்துவிட்டார்கள். ஜூரர்களுக்குக்குற்றத்தை எடுத்துச் சொன்ன நீதிபதியும் இவர்களைத் தண்டிக்க வேண்டிய முறையில் தான் விளக்கம்கூறி இருக்கிறார். நிறபேதக்கண்ணால் பார்க்கக்கூடாதென்றும் எச்சரித்திருக்கிறார். இவ்வளவிருந்தும், அக்கொலைபாதகர்களுக்கு விடுதலை கிடைத்துவிட்டது; விடுதலை செய்யப்பட்டதற்கான எந்தக் காரணத்தையும் நீதிபதி குறிப்பிடவில்லை.

நிரம்பநாகரிககாலம் என்று பேசப்படுகிறது, இந்தக்காலத்திலும்கூட இதுபோன்ற கொடுமைக்கு இடமிருக்கிறது. நிறத்தைக் கண்டா நீதி நாணுவது? சாய்வது? பிறவியிலே உயர்வுதாழ்வு கருதித் தாழ்ந்தோர் என்போருக்குத் தீங்கிழைப்பதிலும் இது கொடுமை. உலகிற் கெல்லாம் அச்சத்தைப் போக்கப் போவதாகப் பெருமை பேசும் அமெரிக்காவில், நீக்ரோக்களுக்கு இழைக்கப்படும் தீமை என்றுதான்தொலையுமோ?

—

## எழுதும் முறை!

யாரை வேண்டுமானாலும், என்ன வேண்டுமானாலும் கண்டபடி தூற்றி எழுதுவதைத் தான் இங்கு பலர்கண்டிருக்கின்றனர். அதுவேதான் எழுத்துரிமை எனும் ஆழ்ந்த நம்பிக்கை எழுத்தாளரிடையே இருந்து வருகிறது. இரண்டாண்டுகளுக்கு முன் ஜின்னா-அமெரி கடிதப் போக்குவரத்தென, பார்பாய் 'மாத்ருபூமி' மோசடியாகத் தயாரித்துச் சில கடிதங்களை வெளியிட்டது. பின்னர் அவை வெறும் மோசடிக் கடிதங்களெனப் புலனாயிற்று. 'தாலியறுத்த முதலியாருக்கா ஓட்டு?' எனவேண்டுமென்றே அபாண்டமாகப் பழி சுமத்தி ஏசினர் சிலர்—எழுதின சில ஏடுகள். இதுபோன்ற ஒரு சிறு காரியத்தையும் இங்கிலாந்தால் செய்ய முடியவில்லை.

டெய்லி ஹெரால்ட் எனும் ஆங்கில தினசரியில்ஜனவரி முதல் தேதி இதழில், தோழர் மோகன்லால் என்பவரின் படத்தைப் போட்டு "ஹிட்லருக்குப் பரிந்து பேசியவர் இவர்" எனக்குறித்து, ஒரு கட்டுரையும் எழுதி இருக்கிறதாம். மோகன்லால் இந்தியா விடுதலை சங்கத்தின் தலைவர். டெய்லி ஹெரால்ட் கட்டுரை, அவருக்கு வேதனையை உண்டாக்கி விட்டது. இந்தப் படத்தைப்பார்த்த ஒருபோர்ட்டர் ஈச்டன் ஸ்டேஷனில் தோழர் லால் அவர்களிடம் முரட்டுத்தனமாகவும் நடந்து கொண்டான் அவர் ஹிட்லர்மீது பற்றுடையவர் என்பதற்காக. இதற்குப் பரிகாரம் தேடத்தோழர் லால் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார். பத்திரிகை சார்பில், பிர்ஜாலால் முக்கர்ஜி எனத் தோழர் லாலைத் தவருகத் தீர்மானித்து விட்டதாகவும், தவறெனத் தெரிந்தும் திருத்தம் எழுதி மன்னிப்புத்தெரிவித்ததாகவும், தோழர் லாலுக்குச் செலவான தொகையைத் தருவதாகவும், ஒப்புக் கொண்டதோடு, நூறுபவுன் கோர்ட்டில் கட்டியும் விட்டது.

இங்கிலாந்து—இந்தியா ஆகிய இரண்டு நாடுகளின் பத்திரிகைப் போக்கையும் ஒப்பிட்டுப் பார்த்தால் தெரியும், எழுத்தாளர் எவ்வளவு பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொள்ள வேண்டுமென்பது!

## முதல்தடவை?

சண்டையில் ஜப்பான் வீழ்ச்சியுற்ற பிறகு அங்கு நடைபெற்ற தேர்தலில் தொழில்சங்கத்தலைவரும், சோஷியலிஸ்ட் டெமாக்ரிடிக்கட்சியின் அங்கத்தவருமான கோமாக்ஷி மட்சுகோ என்பவர், தன்னை எதிர்த்த கன்ஸர்வேடிவ் கட்சிக்காரர் ஒருவரைத் தோற்கடித்து வெற்றிபெற்றார். பொதுமக்கள் சபையின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜப்பான் சரித்திரத்திலேயே முதல்தடவையாம், தொழிலாளர் தலைவருக்குக் கிடைத்திருப்பது.

## அற்புதமான கவலை!

"குழந்தைகள் உண்டா."

"அதைஎங்க கேக்கிறிங்க. அடுக்கடுக்கா பத்து கீதுங்க என்னமோ ஆண்டவ கொடுத்தது."

"என்னடா உண்மைதானா? இவ்வளவையும் எப்படியப்பா வைத்துச்சமாளிக்கிறே?"

"அதெ எங்கேக்கிறீங்க? செடி வைச்சவன் தண்ணி ஊத்த மாட்டானுங்களா?"

இத்தகைய உரையாடல்களை நாம் நித்தம் கேட்டு அலுத்துப் போயிருக்கிறோம். ஆனால் இதற்கு நேர்விரோதமானது ஆஸ்ட்ரேலியாவின் நிலை. இயற்கை வளம் அங்கு ஏராளம். ஆனால் அதற்கேற்றாற்போல் அங்கு ஜனப்பெருக்கம் கிடையாது. அங்கு 74 லட்சம் ஜனங்கள்தான் இருக்கிறார்கள், 1945–ல் எடுத்த கணக்குப்படி.

ஆஸ்ட்ரேலிய குடியேற்ற மந்திரியான அர்தர் கால்வெல், பார்லிமெண்டில் கண்ணீர் வடித்திருக்கிறார் இதுபற்றி. இப்பொழுது பிறப்பது போலவே குழந்தைகள் பிறந்து வந்தால், இன்னும் 55 ஆண்டுகளில் ஒரு ஆஸ்ட்ரேலியர் கூட இருக்க மாட்டார்களாம். 1905-ல் ஜனத்தொகையில் நூற்றுக்கு முப்பத்தைந்து பேர் 15 வயதிற்குட்பட்ட சிறுவர்களாக இருந்தார்களாம். 1946-ல் அது 24 சதவிகிதமாகக் குறைந்துவிட்டதாம். இப்போக்கின்படி 1975-வது ஆண்டில் சிறுவர்கள் 20 சதவிகிதம் குறைந்து விடுவார்களாம். 65 வயது வந்தவர்கள் இப்பொழுது 8 சதவிகிதம் இருப்பதற்குப் பதிலாக அப்பொழுது 12 சத விகிதம் ஆய்விடுவார்களாம்.

விஷயம் தெரியாததால் அவர் கவலைப்படுகிறார். புத்திர உற்பத்தியைப் பெருக்குவதற்கு குறுக்கு வழி ஒன்று இருக்கிறது. இந்தியாவோடு வியாபார ஒப்பந்தஞ் செய்துகொள்ளும் பொழுது, 'வியாசர் விருந்து'க்காகவும் பிரத்தியேக ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டால் கவலை தீர்ந்துவிடுகிறது!

1-ம் பக்கத் தொடர்ச்சி

என வாதிடலாம். காங்கிரஸ் கட்சியின் அடக்குமுறைக்கு அஞ்சி வாய்மூடி இருக்கும் திராவிடக் காங்கிரஸ் தலைவர்கள் மட்டுமல்ல திராவிடத்திற்காகப் பேசத் தகுதி யுடையவர்கள். மற்றவர்களும் இருக்கிறார்கள். அவர்களில் தலைசிறந்தவர் பெரியார். அவர் ஒத்துழைப்பையும் காங்கிரஸ் தலைவர்கள்பெறவேண்டும். அன்றுதான் இந்திய பூபாகம் பகையும் புகையும் இன்றி செல்வச் சிறப்புடன் திகழும். இல்லையேல் குழப்பமும் கொந்தளிப்புந்தான் பரிசாகக் கிடைக்கும். இதற்குச்சினம்கூடாது; சிந்தனை வேண்டும்.

# ★ சிந்தனையும்–சினமும் ★

—*—

"இணைப்புப் பாதை வேண்டும்."

—ஜின்னா

"வீண் மனோராஜ்யம்."

—நேரு.

"பகற்கனவு, மனக்கோட்டை."

—ராஜாஜி.

"விசித்திரமான முட்டாள்தனம்."

—பட்டேல்.

'இணைப்புப் பாதை வேண்டுமா' என்றார் பத்திரிகை நிருபர். "ஆம்! கண்டிப்பாக வேண்டும்" என்றார் ஜின்னா. பத்திரிகையில் இந்தச் சேதி வெளியாயிற்றோ இல்லையோ, சிந்தனை சிகண்டு கிளம்பிவிட்டது. 'இணைப்புப் பாதை அவசியமா? ஏற்படுத்த முடியுமா?' என்ற பிரச்னையை ஆராய்வது வேறு விஷயம். சொல்லைக் கேட்ட உடனே, சிந்திப்பதை விடுத்துச், சினத்துக்கு வேலை தருவது விபரீதத்தில்தான் முடியும்.

எவராவது ஒரு கோரிக்கையை வெளியிட்டால், அதன் நன்மை தீமைகளை ஆராயவேண்டுவது முறையேயன்றி, அதட்டிப் பேசி ஆளை மிரட்டுவது, கோரிக்கைக்கு ஆக்கம் தருமேயன்றி, கோரிக்கையின் பலத்தைக் குறைத்துவிடாது.

பதினன்கு கோரிக்கைகளைத்தான் ஒத்துழைப்புக்கு ஜின்னா நிபந்தனையாகக் கேட்டார். அதனைக் கையாண்டி செய்தனர். கோரிக்கை எண்ணிக்கையில் கூடிற்று. 'நாடே கேட்பீர்போல் இருக்கிறதே' எனும் கிண்டல் பிறந்தது. பாக்கிஸ்த்தான் கேட்கும் நிலையும் உண்டாய்விட்டது.

கிண்டல், கேலி, ஆத்திரம், அச்சுறுத்தல், அவ்வளவு முறையும் கையாண்டாய் விட்டது. இவ்வளவு முறைகளும் தீர்ந்த பிறகு, எடுத்துக்கொண்ட நரிச் செயலும் எதிர்பார்த்தப் பலனைத் தரவில்லை. பின்னர் அதிகாரத்தால் அடக்கி விடலாம் எனும் ஆசை தட்டிற்று. அதுவும் வீணாயிற்று. நாட்டில் குழப்பமும் கொந்தளிப்புந்தான் கிடைத்த பலன். சென்ற நாட்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் இவை. இவை காட்டும் படிப்பினையைக் கற்றிருக்க வேண்டும் காங்கிரஸ். கற்றதா? இல்லை. எதனையும் மறக்கவுமில்லை; கற்கவும் இல்லை. பிரசார பீரங்கியும், பணகுண்டும் தம்மிடம் நிறைய இருக்கிறது என்ற தலை வீக்கந்தான் இத்தவறான போக்குக்குக் காரணம்.

இன்றுபாக்கிஸ்த்தான் கிடைப்பது முடிந்த முடிவாகப் போய்விட்டது. பிரிவினையா இல்லையா என்பதல்ல இன்றுள்ள பிரச்னை. பாக்கிஸ்தான் நிலப்பரப்பை எந்த அளவிற்குக் குறைப்பது என்பதே காங்கிரசின் இன்றைய கவலை. காங்கிரஸ் விருப்பப்படி நிலத்தைத் துண்டாடிவிட்டாலும், சிறு பான்மையோர் பிரச்னை தீர்ந்துவிடாது. சிக்கல் வளர்ந்துகொண்டுதான் இருக்கும். இதனைத் தடுக்க ஒரே ஒரு மார்க்கந்தான் உண்டு. இரு இனத்தாரிடையும் ஏற்படுத்தியுள்ள மனக் கசப்பை மாற்ற மருந்து தேடவேண்டும். ஜின்னாவைத் தூற்றுவதும், மிரட்டிப் பார்ப்பதும் மருந்தாகாது. நோயை அதிகப்படுத்தவே இது தூண்டும். அனுபவ உண்மை இது.

மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதுதான் காங்கிரசின் லட்சியமாக இருக்குமானல், பாக்கிஸ்தான் பகுதியோடு பகைமை காட்ட வேண்டிய நிலைமையே ஏற்படக் காரணமில்லை. பிரிந்த பின்னரும் நண்பர்களாக வாழ இடமிருக்கிறது. காங்கிரஸ் தலைவர்களின் கனல் கக்கும் சொற்கள், அங்காடியிலுள்ள அங்கப்பனுக்கும் அப்துலாவுக்கும் தலை போகும் செயலாக முடிகிறது. ஆபத்தான போக்கு இது. சொற்களை எடைபோட்டுச் சொல்ல வேண்டும்.

இடைக்கால சர்க்காருக்கு அதிகாரம் மாற்றப்பட்டுவிட்டால்நாட்டு நிலை சீராகிவிடுமாம். இதனை காந்தியார்கூட செப்புகிறார். வழி வகை கூறவில்லை. போலீசும் இராணுவமும் தங்கள் கையில் இருக்கிறது எனும் உண்மைதான் இதில் பொதிந்திருக்கிறது. மீண்டும் பழைய இந்தியாதான் இதன் விளைவு.

இரு பாக்கிஸ்தான் பகுதிகளையும் ஒன்று படுத்த இடைப்பாதைகேட்பதில் ஆச்சரியமில்லை. அதனைக் காங்கிரஸ் கையாண்டி செய்வது நேர்மையாகாது. பாக்கிஸ்தான் தனது போக்கில் நல்லாட்சி நடத்தி, செழுமையாக இருக்க வேண்டுமென்ற நல்லெண்ணம் காங்கிரஸ் தலைவர்களுக்கு இருக்குமானல், ஜின்னாவின் இடைப்பாதை கோரிக்கைக்கு இணங்க வேண்டியதுதான். ஆத்திரம் காட்டினாலும், முடிவில்இணங்குவார்கள் என்பதை நாம் அறிவோம். பிளவு பெரிதாவதற்குள் ஒப்புதல் இருக்க வேண்டும் என்பதுதான் நமது ஆசை.

இணைப்புப் பாதை எழுப்பும் சிக்கல், அதனை அனுமதிப்பதோடு மட்டும் தீர்ந்து போகாது. அதனை யார் நிர்வகிப்பது என்கிற புதிய பிரச்னையும் கிளம்பும். இணைப்புப் பாதை பகைமை யினடியாகப் பிறந்தால், அது வெறும் பாதையாக இராது, குருதிபாயும் நீரோடை யாகத்தான் இருக்கும். ரைன், ரூர் பிரதேசத் தகராறை நினைவில் இருத்த வேண்டும். ஐரோப்பிய நாடுகளின் மேல் பார்வையில் அதன் நிர்வாகம் இருக்கப் பார்த்துக் கொள்ளவேண்டும். 'ஆசியா ஆசியர்க்கே' என்று சொல்லும் காங்கிரஸ் இதற்கு இணங்காது. இதற்கு ஒரே ஒரு பரிகாரந்தான் இருக்கிறது.

அதாவது திராவிட நாட்டைத் தனி நாடாகப்பிரித்து, அதன் மேற்பார்வையில் இணைப்புப் பாதையின் நிர்வாகம் ஒப்படைக்கப் படவேண்டும். பிறப்பின் காரணமாகவோ, மதத்தின்காரணமாகவோ சண்டைக் கிழுக்கும் பண்பு தெரியாத இனம் திராவிட இனம் என்பது வரலாறு கண்ட உண்மை. ஆதலால் இரு இனத்தாரும் ஏற்கும்படி நீதி வழங்கு முறையில் திராவிடர்கள் நடந்து கொள்வார்கள் என உறுதியாக நம்பலாம்.

இதற்கு திராவிட நாடு தனி நாடாக ஆக்கப்பட வேண்டும். நாட்டைப் பிரிப்பது என்ற முடிவிற்கு வந்த பிறகு திராவிடத்தின் பிரிவினைக் கோரிக்கை பரிகாசத்திற்குரியது மல்ல, நடைமுறையில் நடக்கக் கூடாதது மல்ல. விருப்பமில்லாதப் பகுதிகளை இந்திய ஐக்கியத்தில் சேர்ந்திருக்கக் கட்டாயப் படுத்த மாட்டோம் எனக் காங்கிரஸ் தலைவர்கள், அடிக்கடி கூறி வருகிறார்கள். இதில் நாணயம் இருப்பதாகக் காட்டிக் கொள்வதற்காகவாவது திராவிடத்தைத் தனிநாடாக்கவேண்டும். மக்கள் சம்மதம் வேண்டாமோ

(10-ம் பக்கம் பார்க்க)

## வழி காட்டவேண்டும்!

குப்பன் பாட்டன் கிராமத்திலே ஒரு பண்ணை அடிமை. தகப்பன் சிலோன் காப்பித் தோட்டத்திலே ஒரு கூலி. சின்னவயதிலேயேபாட்டனுக்குக் கஞ்சிகொண்டுபோய்ப் பழக்கம். வயற்காடு தான் அவனுக்கு விளையாட்டுமைதானம்.வரப்புந்தான் அவனுக்கு படுத்துறங்கும்பஞ்சணை. கோட்டான் கதறல்தான் அவனுக்கு நாதம். ஆண்டையின் மொட்டைக் கொம்பு எருமைதான், குப்பன் ஊர்ந்து செல்லும் வாகனம். நாயும், கடாரியுந்தான் அவன் இணை பிரியாத் தோழர்கள். பண்ணை ஐயா தரும் புளியஞ் சவுக்கடிதான் அவனுக்கு நாள்தோறும் கிடைக்கும் விருந்துபசாரம்.பாட்டனின்பரிவான பேச்சும், பாட்டியின் அரவணைப்புந்தான் குப்பன் வாழ்க்கைக்கு ஆறுதல்.

எத்தனை காலந்தான் குப்பன் இந்த வேதனையை அனுபவிப்பான்? இளமை வயதுக்கேற்ற தேகக்கட்டு இல்லை. எப்படி இருக்க முடியும்? சத்தானசமநிலையில் சேர்த்தா சாப்பிடுகிறான், உலக்கைமாதிரி இருக்க!

புகைவண்டி அவன்ஊரில் அமைக்கப்பட்ட காலம். பாட்டனுக்குச் சொல்லாமலே இரயிலேறிச்சென்னை சேர்ந்தான். மூட்டை தூக்கினதுண்டு. பாரவண்டியை இழுத்ததுண்டு. சில்லரைக் காசுகளை அடிக்கடிக் கண்டானே ஒழிய, வயிற்றுக்கு அது போதவில்லை. வரப்புக்கு பதிலாகச் சாக்கடை ஓரம் படுக்கையறையாகமாறினதுதான்மிச்சம். இந்த வேலை எல்லாம் பிடிக்காமல் ரிக்ஷா இழுக்கும் வேலையில் அமர்ந்தான். அவனை நம்பி யார் ரிக்ஷா கொடுப்பார்கள். எத்தனையோமுறை ஐயாவுக்குச் செய்யாத தெல்லாஞ் செய்து ஐயாவின் மனங்குளிர வைத்து, அம்மாவின் தயவைப் பெற்று, ஒரு ரிக்ஷா இழுக்க உரிமையைப் பெற்றான். உடலிலே சோர்வு தட்டினாலும், கொஞ்சம் உற்சாகத்தோடுதான் இருந்தான் குப்பன் சில நாள். நாளாகநாளாகத்தேகம்மெலிந்தது. ஒழுங்காக நடந்தாலும் இந்தப் போலீஸ்காரர்கள் சும்மா விடுகிறார்களா குப்பனை? வருமானத்தில் பெரும் பகுதி எஜமானனுக்குக் கொடுத்துவிட வேண்டும். இந்தப் போக்கினால் குப்பன் நாள் தவறாமல் இரவில் அமாவாசை விரதந்தான். வாழ்க்கை அவனுக்குச் சலிப்பைத் தான் உண்டாக்கிற்று. வயிறு ஒன்று இருக்கிறதே, இழுத்தான்—இழுத்தான் ரிக்ஷா! அதற்காக!

எப்படியோ கருப்பியின் சேர்மானமும் கிடைத்தது குப்பனுக்கு. குட்டிகளும் ஆண்டுக்கு ஆண்டு தவறாமல் தோன்றலாயின. பெண்ணுக்கு ஒரு முழம் கந்தல்துணி, ஆண் குழந்தைகளுக்கு நாலு விரல் கடை பழந்துண்டு. இதுதான் சென்னையில் வாழும் குப்பன் குடும்பத்தின் பெருமை பொருந்திய வரலாறு. இத்தகைய குப்பன்கள் மீதெல்லாம் சென்னை சர்க்காரின் கருணை கடாட்சம் விழுந்திருக்கிறது. தடுத்தாட்கொள்ளத் திட்டம் தீட்டி விட்டார்கள்.

மாடாய் உழைக்கும் கண்றாவி வாழ்க்கையிலிருந்து குப்பன்களை விடுதலை செய்யவேண்டியதுதான். ரிக்ஷாவை அவர்கள் தொடக்கூடாதெனத் தடுத்துவிட்ட பிறகு, அவர்களின் பிழைப்புக்கு வழி காட்ட வேண்டியது முக்கியம். அவசியமாகச் செய்யவேண்டியதைச் செய்யாமல் விடுத்து, இருக்கும் வேலையையும் இழக்கச் செய்வது எந்த வகையிலும் நீதியாகாது. எச்சிலிலைச் சோற்றை எடுத்துண்ணும் ஒருவனைப் பார்த்து, 'சுகாதாரத்திற்குக் கேடு—நாகரிகத்திற்குஒத்ததல்ல—இப்பழக்கத்தைத் தடுத்தே தீருவேன்' எனப் பலவந்தமாக இழுத்து அப்புறம் விட்டுவிட்டு,தம்வேலையைப்பார்த்துக் கொண்டு வீதி வழியே நடப்பவனைப் போன்று சர்க்காரும் செயலாற்றுமானால், கண்டனத்துக்குரிய செயலாகவே கருதப்படும். இது மட்டுமல்ல. மக்கள் அனைவரும் டாக்சியிலேயே செல்லும் பண வசதியுடையவர்களும் அல்ல. ரிக்ஷா ஒழிப்பால் நடுத்தர வருமானமுடையவர்களுக்கு ஏற்படும் வசதிக் குறைவையும் போக்க முயலவேண்டும். நமக்குத் தெரிந்தவரையில் இதற்கான திட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்களெங்கே திட்டம் தீட்டுவது, அவரவர்கள் மந்திரிப் பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்கே, திட்டம் தீட்டவேண்டிய தொந்தரவு இருக்கிறதே!

●


# திருமண அழைப்பு.

ஈரோடு, மண்டிவியாபாரம்
தோழர் S. இராமசாமி அவர்களின் திருக்குமாரி
தோழியர்
**எஸ். ஆர். காந்தி, B. A. (Hon)** அவர்கட்கும்
(பெரியார் ஈ. வே. ரா. சகோதரியார் குமாரி)
ஆனைமலைத் தோழர்
**கிருஷ்ணசாமி B. sc** அவர்கட்கும்

**5—6—47.** காலையில், ஈரோடு, கச்சேரிவீதி மணமகளார் இல்லத்தில் வாழ்க்கைத்துணை ஒப்பந்தம் தோழர் C, N, அண்ணாத்துரை தலைமையில் நடைபெறும்.

பெரியார் ஈ. வே. ரா. அவர்களும் மற்றும்பலரும் சொற்பொழிவாற்றுவர். அன்பர்கள் வருக!



## திருச்சியில் "நீதிதேவன் மயக்கம்" 30-6-47-ல்

4-ம் பக்கத்தொடர்ச்சி

முறையை ஆதரிக்கவில்லை. வக்காலத்து வாங்காது முதலாளிகளின் வக்கீலாக வரிகுறைக்க வாதிட்டார். வெற்றியும் பெற்றார். இடைக்கால சர்க்காரே தகர்ந்துவிடும் அளவிற்கு நெருக்கடி ஏற்படும் என எதிர்பார்க்கப்பட்டது. முதலாளிகள் வெற்றி பெற்றனர். அவர்களுக்கு வெற்றியைத்தேடித்தந்தது சமதர்ம நேருவைத் தலைவராகக்கொண்ட தேசிய சர்க்கார். தேசிய சர்க்கார்யாருக்காக இருக்கிறது என்பது இதிலிருந்து விளங்கவில்லையா?

குறைந்த விலைக்குக் கிடைக்கும் மூலப்பொருளையும், குறைந்தகூலியில் ஏராளமாகக்கிடைக்கும் தொழிலாளர்களையும் கொண்டு தொழிற்சாலைகளில் செய்யப்படும் பொருட்களை வெளிநாட்டுச்சந்தைகளுக்கு அனுப்பியும் பொருள் திரட்டலாம், லாபமும் ஏராளமாகக் கிடைக்கும். ஓர் அளவுக்கு உள்நாட்டில்கூடமக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த இம்முறை நல்லபயன்தரும். இந்தமுறையைத்தான் பிரிட்டிஷார் இதுவரையில் கையாண்டார்கள் இந்தியாவில். இந்தோ நேஷியாவில் டச்சக்காரர்களும், இந்தோ சைனாவில் பிரெஞ்சுக்காரர்களும் இதே முறையைத்தான்பின்பற்றினார்கள். இதுதான் ஏகாதிபத்யமுறை; இதனைத்தான்நாம் ஒழிக்க விரும்பியது. ஜாவா புரிந்த சமர், வைட்நாம் புகைச்சல், மடகாஸ்கர்கிளர்ச்சி, முதலியனஏகாதிபத்யச்சுரண்டலிலிருந்து விடுபடத்தான்.

உள்நாட்டிலே முதலாளித்துவமுறைக்கு வழி இல்லையானால் மார்க்கெட்டைத்தேடி மற்ற நாட்டிற்குச் செல்லுகின்றபொழுதுதான் ஏகாதிபத்தியமாக உருவாகிறது. பிரிட்டன், பிரான்ஸ், டச்சு முதலிய ஏகாதிபத்தியநாடுகள் இதுவரையில் முறையே இந்தியா, இந்தோ சைனா, ஜாவா முதலிய நாடுகளின் அரசியல் அதிகாரத்தைத் தங்கள் கைகளில் வைத்துக்கொண்டு, அடிமையான நாடுகளின் செல்வத்தைச் சுரண்டுவதில்ஈடுபட்டிருந்தன. இந்த ஏகாதிபத்திய நாடுகளின் செல்வநிலை சீரழிந்துபோயிற்று செப்பனிட முடியாத அளவிற்குபோரின் காரணமாக. ஆதலால் பயமுறுத்தும் போக்கு மாறி, பரிவு காட்டும்பக்குவம்அவைகளுக்கு ஏற்பட்டிருக்கின்றன.

அமெரிக்காவின் சுரண்டும் தன்மைமற்றநாடுகளில் அரசியல் ஆதிக்கம் செலுத்துவதில் பிணைக்கப்பட்டிருக்கவில்லை. யுத்தத்தினால் பெருஞ்செல்வம் பெருகிப்போய்க் கிடக்கிறது அமெரிக்காவில். சண்டையின் பலனாகச் சரிந்து போன நாடுகளுக்குக் கடன்கொடுத்து உதவுவது என்னும் பரோபகாரப் பேச்சில் மற்ற நாடுகளின் நிமிர்ந்து நிற்கும் போக்கைக் குனியவைக்கப் பார்க்கிறது அமரிக்கா, இம்முறை சிலநாடுகள் விஷயத்தில் வெற்றியையும் தந்துவருகிறது. இருந்தாலும் இது ஆபத்தான போக்கு; மற்றொரு போருக்கு அடிகோலுவது. நிற்க,

உள்நாட்டிலே கொழுக்கமுடியாத இந்திய முதலாளித்துவம், ஆசியநாடுகள்மீது நாட்டம் செலுத்துகிறது. அந்தரங்கத்தில் இந்த எண்ணத்தை இருத்தித்தான், இரண்டுதிங்களுக்கு முன் டில்லியில் சமதர்ம நேரு தலைமையில் ஆசிய மாநாடு கூடிற்று. வரவேற்புத்தலைவர் ஹிராம் இந்திய முதலாளித்துவகூட்டில் ஒரு முக்கியஸ்தராவார். இந்திய முதலாளிகள் இந்தியாவிலுள்ள ஏழை எளியவர்களுக்குமட்டும் தர்மகர்த்தாக்களாக இருப்பதோடுமட்டும்திருப்தியடையவில்லை. ஆசியாவிற்கே அவர்கள்தர்மகர்த்தாக்களாக இருக்க மனுப்போடுகிறார்கள்! மனித சமுதாயத்தில் அவர்களுக்கு அவ்வளவு கருணை! என்ன இருந்தாலும் தர்ம வாழ்க்கை நடத்தும் மண்ணில் பிறந்தவர்களல்லவா? அந்தச்சாரம்அவர்களைவிட்டுப் போய்விடுமா?

ஆசியர்களுக்குக் 'கூட்டு நல வட்டாரம்' தயாரித்த ஜப்பான் சாய்ந்துவிட்டது. அதுவிட்டுப்போன அரும்பணியையாற்றுகின்ற பொறுப்பு இந்திய முதலாளித்துவத்தின் மேல் விழுந்து இருக்கிறது. ஆசை இருப்பதிலே ஆச்சரியமில்லை. அமெரிக்காவின் செல்வப்பிணைப்பில்சீனசிக்கி பலகாலம் ஆய்விட்டது பர்மாவோ தொழில் வளத்திற்குத் திட்டம் தீட்டுகிறது. இந்தோ நேஷியாவும் அதே போக்குத்தான். வைட்நாம் இனி வெளிநாட்டுச் சுரண்டலுக்கு இடந்தராது. பிலிப்பைன்ஸ், அமெரிக்காவின் உறவை அறுத்துக் கொள்ளாது, ஆப்ரிக்காவில் அடியெடுத்து வைக்கமுடியாது. இந்தியாவிற்குள்ளாகவோ, பாக்கிஸ்தான் பகுதி சுற்றுச் சுவர் எழுப்பிவிடும். இயற்கை வளமிருந்தும் தொழில் வளம் இல்லாது வறுமையில் வாட்டமுற்றுக்கிடக்கும் திராவிடத்தைச் சிலகாலம் சுரண்டலாம். வெளிநாட்டில் கால்வைக்க வழியில்லை.போட்டி பலமாக இருக்கும். இதனைச்சமாளிக்க ஒரே வழியுண்டு. அதுதான் போர்.

போருக்கு, உள்நாட்டில் குழப்பம் இருத்தல் ஆகாது. பிற நாட்டைச் சுரண்டுவதின் மூலம் தேசத்தின் கௌரவம் காப்பாற்றப்படவேண்டும். அதற்காக மக்கள் தியாகம் செய்யவேண்டும். வயிறு நிறைய உணவு வேண்டும் எனப் பேசினால் கிளர்ச்சி ஏற்படும். வாழ்க்கைத்தரம் உயரவேண்டுமென்றால் குழப்பம் ஏற்படும். எனவே தொழிலாளர்கள் காந்தியத் தத்துவமான 'எளிய வாழ்க்கை, உயர்ந்த எண்ணம்'எனும் தத்துவத்தைக் கொள்ளவேண்டும். இதற்காகத் தொழிற் சங்கங்கள் வேறு கட்சியினர் ஆதிக்கத்தில் இருத்தல் கூடாது. அதற்காக அரசியல் வாடையே வீசாத ஒரு தேசிய தொழில் ஸ்தாபனம் ஆரம்பிக்கப்படவேண்டும். ஆதலால் ஆரம்பித்து வைக்கப்பட்டு விட்டது, பட்டேல், கிருபளானி, முதலியஅரும் பெரும் நாட்டுத் தலைவர்களால். அவர்கள் அரசியல் கட்சிக்காரர்கள் அல்ல என்பதைத்தொழிலாளர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும். நிற்க,

வேலை நிறுத்தம், தொழிலாளர்களுக்குப் பொழுது போக்கு விளையாட்டல்ல. பெண்டு பிள்ளைகளைப் பற்றி அவனுக்கிருக்கிற கவலை வேறு எவருக்குமே இருக்க முடியாது. வேலைக்குச் செல்லவில்லையானால் கிளிமொழியும், மழலைச் சொல்லும், கேட்கச் சகிக்காத பேரிரைச்சலாக மாறும் என்பது அவனுக்குத் தெரியும். ஆரம்பத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்குக்கூட, அவனுக்குக் கிடைக்கும் கூலி போதியதாக இல்லை. கண்களிலே நீர், நெஞ்சிலே திகில், அடி வயிற்றிலே தீ; இதுதான் வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளியின் சோகச் சித்திரம். கேட்டது கிடைக்கவில்லையானாலும், உள்ளதும் போய்விடுமோ என்கிற அச்சம். போலீஸ் என்ன பாடு படுத்துமோ என்கிற கிலி. கருங்காலிகள் புகுந்துவிடுவார்களோ என்ற பயம். தொழிற்சாலையையேமூடிவிடுவானோ முதலாளி எனும் இடி. தொழிலாளர்களிடை ஒற்றுமையைக் கெடுக்க எந்த உருவத்தில் எது வருமோ எனும் ஏக்கம். அடுத்துக் கெடுக்கும் எத்தர்களின் வார்த்தைக்கு எங்கு தொழிலாளர்கள் பலியாகி விடுகிறார்

களோ எனும் அவநம்பிக்கை. இவ்வளவும் வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர் ஒவ்வொருவர் உள்ளத்திலும் எழும் பயங்கர எண்ணங்கள். இதற்கெல்லாம் தங்களைப் பக்குவப்படுத்திக்கொண்டு வளர்ந்து வரும் சமுதாயந்தான் தொழிலாளர் சமுதாயம்.

இந்தியாவில் தொழிற்சங்கக் காங்கிரஸ் ஆரம்பித்து கால் நூற்றாண்டு ஆகிறது. அதற்கு முன்பெல்லாம் தொழிலாளர்கள் மணிக் கணக்கில்லாமல் வேலை செய்து வந்திருக்கிறார்கள். அன்று இருந்த சட்டமே 12 மணி நேரம் வேலை செய்ய வேண்டுமென விதித்திருந்தது. தொழிற்சாலைகளிலே வேலை செய்த சிறுவர்கள் பட்டகஷ்டங்கள் கொஞ்சமல்ல. தொழிலாளிகளுக்குஏதாவதுஉரிமை உண்டு என்கிற எண்ணமே ஏற்பட்டதில்லை. முதலாளியின் அடிமையாகவே அன்று தொழிலாளர் இருந்தனர். கடந்த மகாயுத்தத்தின் பின்னர்தான் தொழிற் சங்கத்தின் அவசியத்தைத் தொழிலாளர்கள் உணர்ந்தார்கள். உரிமைக்காக எழுந்த போராட்டங்களில் பலர் பலியாயினர்; வாழ்வு இழந்தனர். சிறையில் வாடினர். தொழிலாளர்கள் தமது செங்குருதியால் வளர்த்து வந்தனர் தொழிற சங்கக்காங்கிரசை. இதனைச்சிதைக்கத் திட்டமிட்டு விட்டனர் காங்கிரஸ் தலைவர்கள்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்யங்கூட இந்த நாட்டில் போட்டிச் சங்கம் ஏற்படுத்தித் தொழிலாளர் ஒற்றுமையைக் கெடுத்ததில்லை. இரத்தவெறி பிடித்த ஏகாதிபத்தியத்தையும் மீறிவிட்டார்கள், துரோணச்சாரி நீதி கற்றதேசியத் தலைவர்கள்.

காங்கிரசின் சுதந்திரக்கிளர்ச்சியை அடக்க ஏகாதிபத்தியம் நயத்தாலும் பயத்தாலும் பல காரியங்கள் செய்ததுண்டு. ஏகாதிபத்திய சாகசத்தில் சிக்கி விருதுகள் பெற்றவர்களை, நாட்டுக்கு நாசம் விளைவிப்பவர்களெனக்காங்கிரஸ்தோழர்கள்வர்ணித்ததுண்டு. இது முழு உண்மை அல்லவானாலும் ஓர் அளவு உண்மை உடையதுதான். இன்று பம்பாய் மான்சஸ்டர் ஆன பிறகு, வெள்ளை நிறம் பழுப்பு நிறமாக மாறிவிட்ட பிறகு, உண்மையான உரிமைப் போர் நாட்டில் நடைபெறாமல் போகுமா? உழவனுக்கு நிலமும், உழைப்பாளிக்கு முழுப்பலனும், எண்ணியதை எடுத்துக் கூறும் உரிமை எல்லோருக்கும் கிடைக்கும்வரை யார் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருந்த போதிலும், படையை ஏவும் பண்பும் பலமும் பெற்றிருந்த போதிலும் உரிமைப் போர் நிகழ்ந்தே தீரும்.

தோழர் N. M. ஜோஷிக்குத் 'தொழிற் சங்கத் தாத்தா' என்று பெயர். அவரே அலறுகிறார் புதிய சங்கத்தின் பிறப்பைக் கண்டு. பல மாகாணங்களின் தொழில் மந்திரிகள் கலந்துகொண்டதிலிருந்து சர்க்காரின் செல்வாக்குப் புதிய தேசிய தொழிற் சங்கத்திற்கு இருக்குமெனவும், இதன் பலனாகப்புதிய தொழிற் சங்கம் அரசியல் கலவாத தொழிலாளர் ஸ்தாபனமாக இருக்காதெனவும் எடுத்துக் காட்டுகிறார். தொழிலாளர் தோழர்களுக்கு இதனை அர்ப்பணம் செய்கிறோம். தோழர் ஜோஷி ஒரு கம்யூனிஸ்ட் அல்ல. காங்கிரஸ் பற்றுள்ளவர்.

**கோவைத்**தொழிலாளர் தொகுதிச் சட்டசபை மெம்பர்தோழர் குப்புச்சாமி, தொழில் மந்திரிக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். பாலமலை ரங்கநாதர் மில்லில் தொழிலாளர்கள் 22—4—47 முதல் வேலை நிறுத்தம் செய்திருப்பதாகவும், ஐந்து மாத போனஸ் கொடுக்கவேண்டுமென மாஜி பிரதமர் பிரகாசம் கூறியும், மில் முதலாளிகள் இரண்டு மாத போனஸ்கூடக்கொடுக்கவில்லை என்றும், வேலை நிறுத்தம் செய்துள்ள தொழிலாளர்களுக்குத் தொந்தரவு கொடுக்கப்படுவதாகவும், அந்தக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இதற்காக வேண்டி இம்மாதக் கடைசியில் உண்ணாவிரதம் இருக்கப் போவதாகக் குறித்துள்ளார். ஏன் இவருக்கு இந்த நிலை? இவர் கம்யூனிஸ்ட் அல்லவே! கதர்சட்டைக்காரர் ஆயிற்றே! கம்யூனிஸ்ட் தோழர் இராமமூர்த்தியைத் தேர்தலில் தோற்கடித்தவர் இவர். இவ்வளவுதானா?

கம்யூனிஸ்ட் ஆதிக்கமற்றது சென்னை பி அண்டு சி மில் தொழிலாளர் சங்கம். அங்கும் கடந்த 80 நாட்களாக வேலை நிறுத்தம் நடைபெறுகிறது. பிர்லா பரம்பரையினரும் அல்லமில்முதலாளி. வெள்ளைத்துரை மகன். சத்தியத்தைக் காக்க வந்த காந்திய பக்தர் ஓமாந்தூரார் தான் பிரதமர். இருந்தும் என்ன? 14500 தொழிலாளர்கள் குடும்பங்களுடன் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு போராடுகிறார்கள். தேசிய தொழிற் சங்கந்தான் இதற்குமாற்று மருந்தா? டில்லியில் தேசிய தொழிற் சங்க ஆரம்ப விழாவில் கலந்திருந்த பெருந்தகை ஓமந்தூராரையே கேட்கிறோம்!

பத்து ஆண்டுகளுக்கு முன்னால் இதே நிலைதான் ஜெர்மனியில்தொழிலாளர்களுக்கு ஏற்பட்டது. கம்யூனிஸ்டு கட்சியை மட்டுமல்ல, சகல முன்னேற்றக்கட்சிகளையும் சிதைத்தான் ஹிட்லர். வேலைநிறுத்தத்தைச் சட்ட விரோதமாக்கினான். தொழிற் சங்கத்தைஉடைதெறிந்தான். ஜெர்மன்தேசத்திற்காக, தியாகம் எனும் பெயரில் செய்த அட்டூழியம் அது. வீழ்ச்சியுற்ற முதலாளித்துவத்தை நிலை நிறுத்த எடுத்துக்கொண்டது தான் அந்த முயற்சி. போல்ஷ்விக்பூச்சாண்டியைக்கிளப்பினான். போருக்கு ஆயத்தமானான். உலகைக் கொலைக்களமாக்கினான்.

அதே நிலை இன்று இந்தியாவில் தலைகாட்டுகிறது. தேசியத் தலைவர்கள் செய்த தியாகத்தை, சிறைவாசத்தை, சிந்திய இரத்தத்தை ஈடு காட்டுகிறார்கள்! எதிர் காலத்தை விலைக்கு வாங்க. அதற்கான ஆரம்ப வேலையைத் தொடங்கிப்பலநாள் ஆய்விட்டது. தொழிற்சங்கத்தின் தலையில் கை வைக்கும் அளவிற்கு நோய் முற்றி இருக்கிறது. இது அபாய அறி குறி. எச்சரிக்கையாக நடந்து எதிர்காலத்தைஇன்பபுரியாக அமையுங்கள்.

**“நாட்டில் ஏற்பட்டுள்ள தொழிலாளர் அமைதியின்மைக்கெல்லாம் காரணம் அவர்களுக்குள்ள வசதிக் குறைவும், வாழ்க்கைத் தொந்தரவுந்தான்”**

புதிய சங்கத்தை ஆரம்பித்து வைத்தபோது குல்சாரிலால் நந்தா பேசிய வாசகம் இது. 5—5—47-ல் ஹிந்து பத்திரிகையில் இருப்பது. இதனைப் போக்க வழி செய்யாது தொழிலாளர்ஒற்றுமையைக்குலைத்து தொழிலாளர் துன்பத்தைத் துடைக்கப்பார்ப்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியமாகும்.

✱

# அவர்களுக்கே நம்பிக்கையில்லை.

★

(நக்கீரன்)

காஞ்சிபுரத்திலிருந்து 18–கல் தொலைவில் திருவோத்தூர் என்னும் ஓர் ஊர்உளது, சம்பந்தர் காலத்தில் திருவோத்தூர் என்று அழைக்கப்பட்ட அவ்வூர் இப்போது திருவத்திபுரம் என்று அழைக்கப்படுகின்றது. சம்பந்தர் காலத்தில். இவ்வூரில் ஒரு சிவஅன்பர் இருந்தார். அவர் சிவனுக்கெனப் பனைமரங்கள் வளர்த்தார். அப்பனைகள் ஆண்களாகிக் காயாதிருந்தன. அதைக் கண்ட அவ்வூர்ச்சமணர்கள், அந்தச் சிவ அன்பரை நோக்கி, "உமது ஆண் பனைகள் காய்க்குமா? சிவனருளால் காய்க்கச் செய்யமுடியுமா? என்று கேட்பது வழக்கம். இதனால் அந்தச் சிவஅன்பர் மனக்கவலையோடு இருந்தார். அந்தச்சமயத்தில் சம்பந்தர் அங்கு வந்தார். அவ்வன்பர் தம் குறையைச் சம்பந்தரிடம் முறையிட்டார். சம்பந்தர் 'பூத்தேர்ந்தாயென' என்று தொடங்கி "குறும்பைஆண் பனை ஈன்குலை ஓத்தூர்" என்று பாடி முடித்தார். உடனே ஆண்பனைகள் எல்லாம் பெண்பனைகள் ஆயின; ஒவ்வொன்றிலும் குலைகள் தொங்கின; காய்கள் பழுத்தன, பனைகள் சம்பந்தரின் அருள் பெற்ற காரணத்தால், தங்கள் காலம் கழித்து, முடிவில் சிவமாயின என்று சொல்லப்படும் ஒரு நிகழ்ச்சியும் சம்பந்தர்வரலாற்றில் காணப்படுகின்றது.

இந்நிகழ்ச்சியில் கூறப்படுவது போல், ஆண்பனைகள் ஆண்டவன் அருளால் பெண்பனைகள் ஆயினஎன்பது எந்த அளவுக்கு உண்மை—ஆண்பெண் ஆகுமா—ஆக்கமுடியுமா? என்பன குறித்து ஆராய்வதுஒருபுறமிருக்க, முதலில், அந்தச் சிவஅன்பர் பனைகளை வளர்த்த நோக்கத்தையும், சமணர்களுக்கும் சிவ அன்பருக்கும் இடையே நடைபெற்றஉரையாடலையும் தெளிவாக ஆராய்ந்தால், இந்நிகழ்ச்சி எத்துணை உண்மை என்பதும், சம்பந்தர் வரலாற்றில் இது புகுத்தப்பட்டதன் காரணமும்நன்கு புலப்பட்டுவிடும். திருவோத்தூர்ச் சிவஅன்பர், தாம் பனைகளை வளர்க்கத் தொடங்கும் போதே, "இவை சிவனுக்குரியன" என்ற நோக்கத்துடனேயே வளர்க்கிறார். சிவனுக்கு உரிமைப்படுத்தி வளர்க்கப்பட்டஅப்பனைகள ஆண்பனைகளாகவே வளர்கின்றன. இந்த நிலையில், அவ்வூர்ச் சமணர்கள், சிவ அன்பரை நோக்கி உம்முடைய ஆண்பனைகள் பெண்பனைகள் ஆகுமா? சிவனருளால் ஆக்கமுடியுமா? என்று கேட்டதாகச் சொல்லப்படுகின்றது. இந்தக் கேள்வி கேட்கப்பட்டதும் அந்தச் சிவஅன்பர் ஏன்கவலைப்பட்டார் என்பது தெரியவில்லை. ஒருஉண்மையான சிவஅன்பருக்கு இந்தக்கவலை ஏற்படக் காரணமேயில்லை, கேள்வி கேட்ட சமணர்களை நோக்கி அந்தச் சிவஅன்பர்,

"நான்பனைகளைவளர்க்கத்தொடங்கும்போதே, இவை சிவனுக்குரியன என்ற நோக்கத்தோடேயே வளர்த்தேன். ஆண்பனைகளாயன்றிப் பெண்பனைகளாய் இருக்கவேண்டுமென்பது சிவனுடைய விருப்பமாய் இருந்தால், சிவன் அவற்றைப் பெண்பனைகளாகவே வளரும்படி செய்திருப்பார், சிவனுடைய விருப்பம் அவை ஆண்பனைகளாய் இருக்கவேண்டுமென்பது அவை ஆண்பனைகளாகவே வளர்ந்திருப்பதினின்றும் அறியக்கிடக்கின்றது. ஆகையால் எம்முடைய எதிரிகளாகிய நும்மனோரின் விதண்டா உரைகண்டு நான்கவலைப்பட மாட்டேன்" என்று கூறியிருக்கவேண்டும், ஒரு உண்மையான சிவஅன்பன் இவ்வாறுதான் கூறியிருப்பான் — கூறவேண்டும் — கூறியிருக்க முடியும். இங்ஙனமன்றிச், சமணர்களின் உரை கேட்டதும் அந்தச் சிவஅன்பர் கவலையுற்றார் என்றும், பின்னர் சம்பந்தர் அங்கு சென்று ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கி அன்பரின்கவலையைப் போக்கினர் என்றும் கூறுவது சிவனையும் சைவசமயத்தையும் இகழுவதாகவே சைவ சமயத்தில் உண்மையான பற்றுக்கொண்டோர் கருதுவர். அந்தச் சிவ அன்பரால் சிவனுக்குக் கொடுக்கப்பட்ட பனைகள் ஆண்பனைகளாக இருந்ததை மாற்றிப் பெண்பனைகளாக ஆகும்படி செய்ததைச் சிறந்த செயலாக எந்தச்சிவஅன்பரும் ஏற்றுக்கொள்ள மாட்டார். சிவனுக்கு, அவைபெண்பனைகளாகவே வளரவேண்டுமென்ற விருப்பம் இருந்திருந்தால், அவற்றைப் பெண்பனைகளாகவே வளரும்படி செய்திருப்பாரன்றிக், கேவலம் சமணர்களின் கிண்டல் பேச்சுக்கு

அடுத்த பக்கம் பார்க்க


## "கதிரவன்"

(15 நாட்களுக்கு ஒருமுறை ராயல் 1x8 அளவில் புத்தக வடிவில் வெளிவரும்)

ஆசிரியர்: புலவர் பு. செல்வராஜ்

திராவிட நாடு பாக்கிஸ்தான் பிரிவினைகளுக்காகவும் திராவிடர்கள் முஸ்லிம்கள் ஆகியோரின் முன்னேற்றத்திற்காகவும் உழைக்கும். முஸ்லிம்கள் — திராவிடர்களாகியோரின் பழங்கால உண்மைச்சரிதங்களும் இன உண்மைகளும் தக்க ஆராய்ச்சியுடன் வெளியிடப்படும்.

எல்லா இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

| சிலோன் இந்தியா | | பர்மா மலாய் | |
|---|---|---|---|
| தனிப்பிரதி | 0—6—0 | தனிப்பிரதி | 0—8—0 |
| 6 மாதம் | 5—0—0 | 6 மாதம் | 6—8—0 |
| 1 ஆண்டு | 9—0—0 | 1 ஆண்டு | 12—0—0 |

ஏஜென்ஸி நிபந்தனைகளுக்கு எழுதவும்.

S. முஹம்மத் ஜக்கரிய்யா,
ஜெனரல் மானேஜர்,
"கதிரவன்" நிலையம்,
94, C.—பிராட்வே, சென்னை.

15-ம் பக்கத் தொடர்ச்சி

அஞ்சி ஆண்பனைகளைப் பெண்பனைகளாக மாற்றியிருக்கவே மாட்டார் எம்முடைய அண்ணலாம் சிவன் என்றே சிவனை மறவாச் சிந்தையினர் கருதுவர். "ஆண்பனைகள் பெண்பனைகளாக மாறினாலன்றிச் சைவம் நிலைக்காதென்றால், அத்தகைய சைவம் நமக்குவேண்டாம்" என்றே நம்பனடியார் கூறுவர். "இன்றுஆண்பனையைப் பெண்பனையாக்கிக்காட்டுவதன் வாயிலாகச் சைவத்தின் உயர்வையும் உண்மையையும் நிலைநாட்ட முயன்றால், நாளைக்கு இன்னொன்று கூறுவர்; அதனையும் செய்துமுடித்தால், வேறொன்று கூறுவர்; இப்படியே ஏடுப்பார் கைப்பிள்ளையாக இருந்து காரியங்களைச் செய்துகொண்டேபோனால் நம்முடையஉண்மைச் சைவத்தின் உயர்வையும் சிறப்பையும் எந்தக்காலத்தில் நிலைநாட்டுவது? எப்படி நிலைநாட்டுவது? யார்நிலைநாட்டுவது? சம்பந்தர்களும்மாணிக்கர்களும் சுந்தரர்களும் அப்பர்களும் ஆயிரம் ஆயிரமாகப் பிறந்து ஆண்டவன் அருளை மழையெனப்பெய்தாலும் 'இதுதான் நம்முடைய சைவம் பாரீர்' என்று தலைநிமிர்ந்து-மார்தட்டிக்கூற முடியாதே! கேவலம் மற்றைச்சமயங்களைப் போல எம்முடைய சைவம் நிலையற்ற மனிதர்களால் உண்டாக்கப்பட்டதல்லவே! தோன்றுமறையாத் தொன்மையோனை தோடுடைய செவியனன்றோ நம்முடைய சைவத்தை உண்டாக்கித் தந்தார்! இதனிடமா குறை காண்பது? இதற்கா இத்துணைப் பரிசோதனை?" என்றன்றோ சைவ மெய்யன்பர்கள் கருதுவர்.

"இவ்வாறெல்லாம் நம்முடைய உண்மையானசைவத்திற்கு, அதனிடம் ஏதோகுறையிருப்பதாகக்கருதி, இல்லாததும்— இயற்கைக்கு மாறானதும், பலரால்இழித்துரைக்கப்படுவதுமான காரியங்களை, அவை சைவத்திற்கு உயர்வு தருவனஎன்று தவறாகக்கருதிக், கருத்துக்கும்காலத்திற்கும் ஒவ்வாத முறையில், அவ்வப்போது தான்தோன்றித்தனமாகக் காரியங்களைச்செய்ததால் தான், இன்று நம்முடைய ஒப்பற்றசைவம்— அங்கிங்கெனாதபடி எங்குமாயிருந்த சைவம்— பொய்வந்துழலும் சமயங்களின் பொல்லாத நெறிகளால் சிதறிச் சின்னாபின்னமாகிக் கிணற்றுத் தவளை போல் கேட்பாரற்றுக் கிடக்கும் நிலை ஏற்பட்டது, சைவத்திற்கு உயர்வு கற்பிப்பதாகக் கருதியவர்களின் கையாலாகாத் தன்மையினால் தான், அந்த உயர்வுகள் எல்லாம் இழிவுகளாக மாறிச், சைவத்தின்பால் மக்களுக்கிருந்த நம்பிக்கையை இழக்கச் செய்து விட்டது. நேற்றுச் சைவ சமயத்தவர்களாய் இருந்தவர்கள் தான், இன்று வைணவர்களாகவும், பௌத்தர்களாகவும், சமணர்களாகவும், கிறிஸ்தவர்களாகவும், முசல்மான்களாகவும், சமயச்சார்பற்றவர்களாகவும் இன்னும் பல பிரிவினராகவும் மாறும் நிலை ஏற்பட்டது" என்றுகூடச்சில சைவமெய்யன்பர்கள் கருதுவர்.

### வறுமை நீங்க?

"வறுமையே மனித சமுதாயத்தின் தலையாய பிரச்னையாக இருக்கிறது. விஞ்ஞானத்தின் துணையால் மேல்நாட்டு உற்பத்தி முறையைமேற்கொண்டு, பெருஞ் செல்வத்தைத் திரட்ட முடியும். இதனால் சகல நாட்டு மக்களின் தேவையையும் இல்லாமல் ஆக்கலாம்."

**நோயேல் பார்க்கர்**

தெரிந்தோ தெரியாமலோ பழக்க வாசனையினாலோ சைவத்தின்பால் நம்பிக்கைவைத்து அதனைப்பின்பற்றி ஒழுகுவோர் பலர் நான்மேலே தீட்டிய வாறெல்லாம் கூறக்கேட்டிருக்கிறேன். அதோடு, ஆண்பனை பெண்பனையான கதையை ஒருவர் அழகாகப் பிரசங்கம்செய்தால் அந்த இடத்திலும் இப்பேர்ப்பட்டவர்கள் இருந்துகொண்டு, "ஆகா! என்ன அற்புதம்! இறைவனின் அருளைஎன்னென்பது! இதுவன்றோ உண்மைச் சமயம்!" என்று கூறித் தம்மை மறந்து இன்பக் கடலில் மூழ்குவதையும் பார்த்திருக்கிறேன்.

இனி இப்படிப்பட்டவர்களைப் பார்த்து, "அன்றொருநாள் இத்தகைய கதைகளால் தான் சைவம் கெட்டுவிட்டதென்றீர்; நேற்று அக்கதைகளைப் பிரசங்கிக்கும் இடத்தில் இருந்து ஆகா என்று ஆரவாரம் செய்தீரே! ஏன் இந்தநிலை?" என்று யாராவதுகேட்டுவிட்டாலோ, "யார் இவன்? சு. ம. ப் போல்இருக்கிறது" என்று முணுமுணுத்துக்கொண்டே, ஏதும் பேசாமல் போய்விடுவதையும், அதே பேர்வழி பக்கத்திலொரு சைவர் வரக்கண்டால் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பாடலுக்கு விளக்கவுரை யாற்றிப் புளகாங்கிதம் அடைவதையும் பார்த்திருக்கிறேன். இந்த நிலை, படித்துப் பட்டம் பெற்றவர்கள் முதல் படியாத பாமரர் ஈறாக எல்லாச் சைவ அன்பர்களிடத்தும் சிறிதும் வேறுபாடின்றிஇருப்பதைக்காணலாம்.

இப்போது, சிலகாலமாகக், காலப் போக்கிற்கேற்பத், தங்களுடைய கருத்துக்களை மாற்றிக்கொண்டதாகப் பாவனை பண்ணும் சிலசைவப் புலவர்கள், புராண இதிகாசங்களில் வரும் கதைகளைப்பற்றிக் கருத்தைச் செலுத்தவேண்டாமென்றும், அவை கட்டிப் புனைந்து கூறப்பட்டவை யென்றும், அவற்றை நம்பவேண்டாமென்றும், ஆனால் கவி நயத்துக்காக அவற்றைக் கட்டாயம் படிக்கவேண்டுமென்றும் கூறத்தொடங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒன்று கூறுகிறேன். அதாவது, கம்பராமாயணம் பெரிய புராணம் போன்ற நூல்கள், அவற்றிலுள்ளகவிநயத்தை மக்கள் நுகர்ந்து இன்புறுவதற்காகப் பாடப்பட்டனவா? அன்றி அந்நூல்களிற் பேசப்படும்.கதைகளின் வாயிலாக மக்களுக்கு மதப்பற்றை உண்டாக்குவதற்காகப் பாடப்பட்டனவா? என்பதை முதலில் அவர்கள் ஆராய்ந்து தெளிவுபெற வேண்

(2ம் பக்கம் பார்க்க)

Edited Printed Published by C. N. Annaduarai, M. A., at "Dravida Nadu" Press,
317—319 Hodgsonpet Conjeeveram.